கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

18-8-1974

50 காசு



வாழ்க்கை ஒரு கண்டுபிடிப்பு



'க்ளிக்' அடித்துவைப்பீர் - நீங்காத நினைவுக்கே

SIHOES/AG/32/TH

விலை
ரூ. 70.25
(எக்சைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



எப்போதுமே உங்கள் கைபோடிருக்கட்டும், தப்பாதத் துணையான க்ளிக் III. மின்னலெனத் தோன்றி மறையும், வாழ்வின் அந்த மகோன்னதமான கணங்களைப் பிடித்துக் காத்திடுவீர், என்றென்றும் நீங்காத நினைவுக்கே. 'குறிவைத்ததும் கப்பென' தப்பாமலே எடுப்பதற்கு ஏற்றது ஆக்பா க்ளிக். நடைமுறைக்குகந்தது. உள்ளது உள்ளபடியே எடுப்பது, கையாளச் சுலபமானது. சிக்கனமானது.


■ 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் 12 பெரிய (6×6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.


■ சிறந்த தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஆகியவை தனியாக விலைக்குக் கிடைக்கும்.

துல்லியமான பிரிண்டுகளையும், என்லார்ஜ்மெண்டுகளையும் பெறுவதற்கே ஆக்பா-கேவார்ட் போட்டோ தாள்களையே வற்புறுத்திப் பெறுங்கள். அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-விற்பனையாளர்களிடமும் கிடைக்கும். ஆக்பா-கேவார்ட் ஏ. ஜி. லீவர்குஷன் அவர்களின் கூட்டுறவோடு தயாரிப்போர்.: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

ஆக்பா க்ளிக்
இந்தியாவின் மிகப் பிரபலமான காமிரா.

ஏகபோக வினியோகஸ்தர்கள் :
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்.,
பம்பாய் • புது டெல்லி • கல்கத்தா • சென்னை
புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட் ஆன்ட்வெர்ப்/லீவர்குஷன் அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 10
ஆகஸ்டு 18, 1974
ஆனந்த, ஆவணி, 2

■

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம்	ரூ. 13-00
ஆறு மாதம்	ரூ. 6-50

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 26-00

மானேஜர்:
கோகுலம்
கக்கப் பூங்கா, சென்னை-600031



உண்ணச் செவிக்குத்
திகட்டா விருந்தும்
உள்ளமும் புறமும்
குமட்டா மருந்தும்
வண்ணச் சுவையாய்
வழங்கும் பெருமான்
வாரியார் தம்மை
வாழ்த்தி வணங்குவோம்
— கி. பாலதண்டபாணி

வண்ணப்படம்:
ஆர். பி. எஸ். மணி



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்த வாரியார்

தூமகேது விநாயகர்

விந்தியம் என்னும் நாட்டில் மசிபாதினி என்னும் நகரத்தில் தூமாசுரன் என்ற அசுரன் அரசு புரிந்து வந்தான். இவன் அசுரர்களுக்கெல்லாம் தலைவன். கரு நிறம் படைத்தவன். நால்வகைப் படைகளை உடையவன். பேராற்றல் படைத்தவன். நற்குண சீலன். சிவ பெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து வந்திப்பவன்.

'முற்பிறப்பில் இவன் விருதி என்ற அரசனாக இருந்து பல யாகங்களைச் செய்தவன். அதனால் இவன் அசுரனாக இருந்தும் உத்தம குணம் படைத்திருந்தான். அந்த நகரத்தில் மாதவராசன் என்று ஒருவன். இவன் அரசர் குலத்தில் பிறந்தவன். இவன் மனைவி சுமுதை. இவர்களுக்கு மகப் பேறு அமையவில்லை. இதனால் உள்ளம் உடைந்த மாதவராசன் மனைவியை நிந்தித்தான். ''உனக்குப் பிள்ளை பிறக்கவில்லையே! உன்னை மலடி என்று எல்லோரும் ஏசுகிறார்களே! உனக்கு வெட்கமா யில்லையா? உன்னைக் காணும்போதெல்லாம் என் உள்ளம் கொதிக்கின்றது. நீ எங்காவது தொலைந்து போ'' என்று ஏசினான்.

சுமுதை கணவனுடைய கடுஞ் சொற்களாகிய அம்புகளால் உள்ளம் புண்ணுனாள். சாவது மேல் என்று கடுங் கானகத்தை அடைந்தாள். விலங்குகள் திரியும் காட்டில் அஞ்சாது திரிந்தாள். ''சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங் கால் ஆழம்'' என்பது போல் மாளத் துணிந்த அவளுக்கு விலங்குகளிடத்தில் அச்சம் ஏற்படவில்லை. ஒரு புறம் அமர்ந்து திருமாலை நோக்கித் தவம் செய்தாள்.

விநாயகர் அவள் முன்னால் திருமால் வடிவு தாங்கிப் பஞ்சாயுதபாணியாக வந்து அவளுக்குக் காட்சியளித்தார்.

சுமுதை திருமாலின் திருவடியில் வீழ்ந்து, ''ஆராவமுதான நாராயணரே! அடியேனுக்குப் புத்திர வரம் தந்தருள வேண்டும்'' என்று வரம் கேட்டாள். திருமால் வடிவில் உள்ள கணேசர் கருணை புரிந்து, ''அம்மா! நாமே வந்து உனக்கு மகனாகப் பிறப்போம்'' என்று கூறி மறைந்தார்.

சுமுதை நாட்டுக்கு வந்தாள். வெறுத்த கணவன் அவளை வரவேற்று அன்புடன் உபசரித்தான். அவளுடன் இனிது வாழ்ந்தான். அவள் கருவடைந்தாள். தூமாசுரன் குலத்தின் தன்மையால் அவனிடம் கொடுமைக் குணம் தலை யெடுத்தது. படை திரட்டிக் கொண்டு பலரையும் இடர்ப்படுத்தப் புறப்பட்டான். அப்போது அசரீரி, ''ஏ, தூமாசுரனே! நீ செங்கோல் முறைப்படி நாடாளாது கொடுங்கோலனாக ஆனாய். உன்னைக் கொல்லத் திருமாலே சுமுதை வயிற்றில் கருவாகி வளர்கின்றார்'' என்று கூறியது.

விண்ணொலி கேட்டுத் தூமாசுரன் கலங்கினான். சுமுதையைக் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்தான். விநாயகர் சிறு குழந்தையாக வந்து சுமுதையையும் அவளுடைய கணவனையும் பாதுகாத்துக் கொண்டிருந்தார்.

இதனையறிந்து தூமாசுரன் பெரும் படையுடன் போருக்கு வந்தான். சுமுதை மீதும் அவளுடைய கணவனாகிய மாதவராசன் மீதும் கணை மழை பொழிந்தான். விநாயகர் தமது திருவாயிலிருந்து புகைப்படலங்களைக் கணக்குவழக்கில்லாமல் வெளிப்படுத்தினார். அதனால் திசைகள் யாவும் இருண்டன. தூமாசுரன் முதலியவர்கள் மயங்கி மாண்டார்கள். பின்னர் சுமுதை வயிற்றில் திருமாலின் கூறாக ஓர் ஆண் மகவு பிறந்தது. அது வளர்ந்து அரசு செய்தது.

தூமம் — புகை. தூமத்தை உண்டாக்கியபடியால் கணேசர் தூமகேது விநாயகர் என்று பேர் பெற்றார்.



வாரி வழங்கும் வாரியார் தாத்தா



'கோகுலம்' ஒவ்வொரு இதழையும் பிரித்தவுடன் பிள்ளையாரப்பன் பெருமையைப் படிக்கிறீர்கள் அல்லவா? இதை எழுதுகிற பெரியவராகிய திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளை இந்த இதழ் ''கோகுல''த்தைப் பிரிக்க வேண்டிய சிரமம் கூட இல்லாமல் அட்டைப்படத்திலேயே காண்கிறீர்கள். வாரியார்த் தாத்தாவுக்கு, அறுபத்தெட்டாவது ஆண்டு பிறப்பதை ஒட்டி அவரைக் 'கோகுலம்' தன் அட்டையில் தாங்கி, உங்கள் எல்லோருடைய சார்பிலும் வணங்குகிறது.

குழந்தைகளின் பத்திரிகையில் தாத்தா ஒருத்தரை அட்டையில் போட்டிருக்கிறதே என்றால், இந்தத் தாத்தாவே பல விஷயங்களில் பச்சைக் குழந்தை மாதிரி இருக்கிறவர்தான். அவருடைய படிப்பு, பக்தி வழிபாடு, பரவச அநுபவம், பிரசங்கத் திறமை இவற்றையெல்லாம் பார்த்தால் பெரியவரில் பெரியவராக இருக்கிறார். அதே சமயத்தில் பொக்கைவாய்ச் சிரிப்பையும், களங்கமில்லாத மனத்தையும், குறும்புப் பேச்சையும் பார்த்தால் குழந்தைக்கு குழந்தையாக இருக்கிறார். அவருக்குக் குழந்தைகளிடம் ரொம்ப ரொம்பப் பிரியம் உண்டு. கதை சொல்லுகிற போது நடுநடுவே பிள்ளைகளைப் பார்த்துக் கேள்வி கேட்பார். புத்திசாலித்தனமாகப் பதில் சொல்கிற பிள்ளைகளுக்குப் பழம், புத்தகம், விபூதிப் பிரசாதம் என்று எதையேனும் அளித்து ஆசீர்வாதம் செய்வார். நம் பாலர்களுக்கு நல்ல தெய்வ நம்பிக்கை உண்டாக வேண்டும் என்பதில் அவருக்கு ரொம்பக் கவனம். இதனாலேயே உங்களைப் போன்ற சிறுவர்களைக் கவரும் வண்ணம் வெகு சுவையாகப் புராண இதிஹாஸங்களைப் பிரசங்கம் செய்கிறார். நீங்கள் கேட்டுச் சிரித்துக் கொண்டே யிருப்பீர்கள்; அதே சமயத்தில் நீங்களே அறியாமல் உங்கள் சிந்தனை சிறக்கிற மாதிரி ஒரு பெரிய தத்துவம் உங்களுக்குள்ளே போயிருக்கும். உங்களுக்குச் சர்க்கரை 'கோட்டிங்' கொடுத்த மாத்திரை கொடுத்து உடம்பைக் குணம் செய்கிற வைத்தியர் மாதிரி, கதை 'கோட்டிங்' கொடுத்து உயர்ந்த விஷயங்களை ஊட்டி உங்கள் உள்ளத்துக்கு வைத்தியம் செய்கிற வள்ளல் வாரியார்த் தாத்தா.

உபதேசங்களை வாரி வழங்கும் வள்ளல் மட்டும் அல்ல அவர். பணத்தையும் தர்ம காரியங்களுக்கு வாரித் தருவார் வாரியார் சுவாமிகள். பிரசங்கங்களுக்குக் கிடைக்கிற சன்மானங்களிலிருந்து தமது பிறந்த ஊரான காங்கேய நல்லூரில் கோயில் திருப்பணியும் திருக்குளத் திருப்பணியும் செய்திருக்கிறார். வயலூர் போன்ற வேறு பல முருகத் தலங்களின் திருப்பணிக்கும் அவர் அள்ளி அள்ளித் தந்திருக்கிறார்.

ஆமாம், முருகன்தான் இவரது இஷ்ட தெய்வம். முருக பக்தியிலே மனமுருகி ஊறித் திளைத்தவர் வாரியார்த் தாத்தா. முருகப் பெருமான் கையில் பிடித்துள்ள 'வேலைத் தொழுவதே நம் வேலை' என்றும் 'எவ்வேளையும் செவ்வேளை நினைப்போம்' என்றும் அழகாகக் கூறுவார்.

குழந்தை வேலன் என்றும், குமரன் என்றும் தொழப்படும் குழந்தை சுவாமியைத் தொழுது கொண்டே யிருப்பவரை விடக் குழந்தைகளுக்கு நெருக்கமானவர் உண்டா? இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு ரொம்ப ரொம்ப நெருங்கியவராக ஆகிவிட்டாரில்லையா' குழந்தைத் தாத்தாவுக்கு நமஸ்காரம் செய்யுங்கள்; உங்களுக்கெல்லாம் ஆசீர்வாதம் வாரி வழங்குவார் வாரியார்த் தாத்தா!



தேச தேசக் கதைகள் - ஸ்பெயின்

கல்லானார்கள்!

வெகுகாலத்துக்குமுன்னே ஸ்பெயின் தேசத்தில் மூன்று சகோதரர்களும் அவர்களுடைய ஒரு சகோதரியும் மிகவும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள். முதலில் ஏழையாக இருந்த அவர்கள் எளிய வாழ்க்கை நடத்தினார்கள். ஆனால் உழைப்புக்குப் பின்வாங்காத அவர்கள் விரைவிலேயே ஓர் அழகிய மாளிகையைத் தங்களுக்காகக் கட்டிக் கொண்டார்கள். அந்த அளவுக்கு அவர்கள் செல்வந்தர்களாகி விட்டார்கள். உழைப்பினால் உயரலாம் என்பதற்கு உதாரணமாய் விளங்கினார்கள்.

தங்கள் அற்புத மாளிகைக்குக் குடி புகுந்த அன்று ஊரில் உள்ள எல்லாரையும் அழைத்து விருந்து வைத்து, அதை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடினார்கள். அந்த விழாவுக்கு வந்திருந்த ஒரு முதியவர் அவர்களுடைய மாளிகையை மிகவும் பாராட்டினார். பிறகு, ''இத்தனை அற்புதமான மாளிகையில் ஜீவ நீரூற்றும் அதன் அருகே அழகின் அவதாரமான மரமும் அதன் கிளையிலே பேசும் பறவையும் இருக்குமானால், ''ஆஹா! அதற்கு ஈடாகவோ இணையாகவோ பிறகு எதையுமே கூற முடியாது'' என்றார்.

''நீங்கள் கூறிய இந்த அபூர்வப் பொருள்கள் எங்கிருக்கின்றன? அவைகளை அடைவது எப்படி?'' என்று கேட்டனர் சோதரர்.

''இதோ, இந்த நெடுந்தூரச் சமவெளிக்கு அப்பால் உள்ள மலைக்குப் போனால் நீங்கள் விரும்பினதெல்லாம் கிடைக்கும். இந்த வாளை வைத்துக் கொள்ளுங்கள். இதன் பள பளப்பு மங்காத வரை அந்த அதிசயப் பொருள்



களைத் தேடிப் போகிறவர்களுக்கு எவ்வித அபாயமும் இல்லை என்று அறிந்து கொள்ளலாம். ஆனால் எந்த நிமிஷம் இதன் பளபளப்பான பகுதிகளில் ரத்தத் துளிகள் தோன்றுகின்றனவோ அப்போதே அவர்களுடைய உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்று ஒரு பெரிய கத்தியைக் கொடுத்துவிட்டுப் போனார் அந்த முதியவர்.

சகோதரர்களில் மூத்தவன், ''ஜீவ நீரூற்றைத் தேடி நான் போகிறேன், இதோ கிளம்பிவிட்டேன்'' என்று கூறி நெடுந் தூரத்துக்கு நீண்டு கிடக்கும் சமவெளிப் பிரதேசத்திலே புகுந்து மறைந்தான். சமவெளியின் முடிவிலே ஒரு ராட்சதனைக் கண்டான். 'எங்கே போகிறாய் ?'' என்று கேட்டான் அந்த ராட்சதன்.

''ஜீவ நீரூற்றைத் தேடிப் போகிறேன்'' என்றான் மூத்தவன்.

''இந்த வழியாக, அதோ தெரிகிறதே அந்த மலைக்குச் சொந்தமான அற்புதங்கள் பலவற்றையும் தேடி எத்தனையோ பேர் வந்தார்கள். ஆனால் அவர்களில் யாருமே திரும்பியதை நான் காணவில்லை. உனக்கும் அதே நிலைதான் ஏற்படும். நான் கூறுகிறபடி கேட்டாயானால் அத்தகைய அபாயத்திலிருந்து தப்பலாம். இதே வழியில் சென்றாயானால் அந்த மலை உச்சியை அடையலாம். ஆனால் போகும் வழியில் பல விநோதமான பாறைகளைக் கடக்க வேண்டியிருக்கும். அவைகளைத் தொடவோ கூர்ந்து பார்க்கவோ செய்யாதே. தொடர்ந்து முன்னேறிக் கொண்டு போ. அப்படிப் போகும் போது பின்னால் பல குரல்கள் உன்னைப் பரிகசித்தும் இழித்துரைத்தும் சிரிக்கும், பயமுறுத்தும். எதற்கும் கலங்காமல், காது கொடுக்காமல்,





திரும்பிப் பார்க்காமல் போய்க்கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அங்குள்ள பாறைகளில் நீயும் ஒன்றாகி விடுவாய். மலை உச்சிக்குப் போகும் வரை இப்படி வைராக்கியத்துடன் முன்னேறினால் முடிவில் வெற்றியோடு திரும்பலாம்'' என்றான் ராட்சதன்.

அவனுக்கு நன்றி கூறிவிட்டு நடக்கலானான் மூத்தவன். மலை கண்ணுக்குத் தெரியலாயிற்று. அதன் அடிவாரத்தில் விநோதமான உருவமுடைய பாறைகள் சிதறிக் கிடந்தன. எதையும் தொடாமல் மலை மீதேறலானான். பரிகசிக்கும் வித விதமான குரல்கள், கேலி செய்து கொக்கரிக்கும் குரல்கள், வம்புக்கிழுத்து வசை மொழி கூறும் குரல்கள் அவனுக்கு மிக மிக அருகே தொடர்ந்து கேட்டுக் கொண்டு விரட்டி வந்தன. அவற்றின் இம்சை தாங்காதவன் ஆத்திரத்துடன், குரலுக்குரிய உருவங்களின்மீது வீசுவதற்காகக் குனிந்து ஒரு சிறு கல்லை எடுத்தான். அடுத்தவிநாடி அவன் கைகள் உணர்வை இழந்ததை அறிந்தான். வெகு வேகமாக அவன் உடல் முழுதும் கல்லாக மாறி அவனும் ஒரு பாறையானான்.

பளபளக்கும் பட்டாக் கத்தியைப் பார்த்துக் கொண்டிருந்த சகோதரி திடீரென்று அதன் ஒளி குன்றுவதையும் அதன் மீது ரத்தத் துளிகள் தோன்றியதையும் கண்டு கலவரத்துடன் கத்தினாள். அண்ணாவுக்கு ஆபத்து என்பதை உணர்ந்து கொண்ட சகோதரர்களில் இரண்டாமவன், ''நான் போய்வருகிறேன்'' என்று கிளம்பினான். நடந்து நடந்து நடந்து வெகுதூரம் சென்றவன் அதே ராட்சதனைச் சந்தித்தான். ''மலை உச்சியை நோக்கி ஓர் இளைஞன் இந்தப் பக்கமாக வந்ததைக் கண்டாயா ?'' என்று கேட்டான் ராட்சதனிடம் இளைய சகோதரன்.

''கண்டேன். ஆனால் அவன் திரும்பியதைக் காணவில்லை'' என்று கூறி மூத்தவனிடம் கூறியதையே இவனிடமும் கூறி எச்சரித்து அனுப்பினான். ஆனால் இரண்டாமவனும் உறுதி இழந்து போனான். தன் அண்ணனின் குரலைக் கேட்டுத் திரும்பியவன் அடுத்த விநாடியே கற்பாறையானான்.

இரண்டாவது தடவை கத்தியிலே ரத்தத் துளிகள் தோன்றியதைக் கண்ட மூன்றாவது சகோதரனும் சகோதரியும் துடித்துப் போனார்கள்.

''என் அண்ணன்மார் இருவருக்கும் நேர்ந்த அபாயத்தை அறிந்து அவர்களை மீட்டு வருகிறேன்'' என்று சகோதரியிடம் கூறிவிட்டுக் கிளம்பினான். தனது சகோதரர்கள் சென்ற அதே பாதையில் முன்னேறிய அவன் முன்னேயும் அதே ராட்சதன் தோன்றினான். தன் சகோதரர்களைப் பற்றிக் கேட்ட அவனுக்கும் ராட்சதன் அந்தப் பாதையில் உள்ள அபாயங்களைப் பற்றிக் கூறி எச்சரித்து அனுப்பினான். விசித்திரமான குரல்களின் கேலியையும் ஏச்சுப் பேச்சுக்களையும் சகித்துக் கொண்டு மிக்க உறுதியுடன் என்ன ஆனாலும் திரும்பிப் பார்க்கக் கூடாது என்று முன்னேறினான், மூன்றாவது சகோதரன். ஆனாலும், அந்தக் குரல்களில் அவனுடைய அண்ணன்மார்களின் குரலையும் கேட்டபோது 'என் அண்ணன்மார்களுமா இந்த அநாகரிகக் கும்பலோடு சேர்ந்துவிட்டார்கள்' என்ற அடக்கமாட்டாத ஆர்வத்துடன் திரும்பிவிட்டான். அடுத்த விநாடி அவனும் கல்லாகிப் போனான்.

சகோதரர்களால் நிர்மாணிக்கப்பட்ட அழகு மாளிகையில் கையில் வாளுடனும் விழிகளில் கவலையும் கண்ணீருமாக உலாவிக் கொண்டிருந்தாள் அந்தப் பெண், கத்தியிலே ரத்தத் துளிகள் தோன்றாதிருக்க வேண்டுமே என்று. இரண்டு அண்ணன்மார்களுக்கு நேர்ந்த கதி மூன்றாவது அண்ணனுக்கும் நேர்ந்துவிடக் கூடாதே என்று கலங்கியவளைக் கதறும்படி செய்துவிட்டது வாளிலே தோன்றிய காட்சி.

''என்னுடைய முறை வந்தாகிவிட்டது. நான் எப்படியும் என் சகோதரர்களைக் காப்பாற்றி மீட்டு வருவேன்'' என்ற உறுதியோடு கிளம்பினாள் அந்த அன்புத் தங்கை.

நெடுந் தூரம் நடந்து ராட்சதனைச் சந்தித்தாள். ''என்னுடைய மூன்று சகோதரர்கள் இவ்வழியாக வந்ததைக் கண்டாயா ?'' என்று கேட்டாள்.

''போவதைக் கண்டேன். வழியில் உள்ள அபாயங்களைக் கூறி எச்சரித்தும் அனுப்பினேன். ஆனால் அவர்கள் அதன்படி நடந்திருக்கமாட்டார்கள். அதனால் தான் அவர்கள் திரும்பவில்லை'' என்றான் ராட்சதன். அவன் நல்லவன். உருவம்தான் பூதாகாரமே தவிர உள்ளத்தில் அன்புடையவன்.

'' என் சகோதரர்களை மீட்க நான் என்ன செய்ய வேண்டும்? ஜீவ நீர் ஊற்றின் தண்ணீரைக் கொண்டு வர நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?'' என்று கேட்டாள் அந்தப் பெண். அவளுக்கும் ராட்சதன் எல்லாவற்றையும் விவரமாகக் கூறினான்.

அவனுக்கு நன்றி கூறிய அவள், மன உறுதியுடன் மலையை நோக்கி நடந்தாள். விசித்திரமான கற்பாறைகளின்



வாடா மலர்

நீ பேசும்படி நேர்ந்தால் உண்மையே பேசு. ஏனெனில் இரு பொருள்படப் பேசுதல் பொய் கூறுவதற்குரிய பாதி வழியாகும்: பொய்யோ நரகப் பாதை.
— பேன்

பேச்சு பெரியதுதான். இருந்தாலும் மௌனம் அதைவிடப் பெரியது.
—கார்லைல்

இடையே நடந்து போகும் போது காலடியில் கிடந்த கற்களெல்லாம் கூடக் கிசுகிசுத்துக் கேலி செய்தன. சில அழுதன, கூச்சலிட்டன. தாங்க முடியாத வேதனையோடு கதறின சில கற்கள். உயிருள்ள ஜீவன்களின் வேதனைகளையும், கதறல்களையும், களிப்பையும், கெக்கலிப்பையும் கற்களிடம் கேட்டாள் அவள். அத்தனை பயமுறுத்தல்களையும் அவள் அலட்சியமாகக் கருதி மலை உச்சியையே பார்த்தபடி நடந்தாள். அண்ணன்மார்களின் அழுகுரலையும், 'ஐயோ! எங்களைக் காப்பாற்றேன்!' என்ற அலறலையும் கேட்டும்கூட அவள் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாள். இல்லாவிடில் அவளே கல்லாகிப் போவாளே!

மலை உச்சியை அடைந்ததுமே குரல்களின் கோலாகலங்கள் சட்டென்று அடங்கிவிட்டன. அவள் அபாயத்தைக் கடந்துவிட்டாள். தங்கமாகத் தகதகத்துக் கொண்டிருந்தது ஜீவ நீரூற்றுத் தடாகம். அதிலே அழகின் பிறப்பிடமான அதிசய மரத்தின் நிழல் துல்லியமாகத் தெரிந்தது. அதன் மரக் கிளையிலே பேசும் பறவை அமர்ந்திருப்பதையும் கண்டாள் அந்த நீரூற்றுநிழலுக்கடியில்.

முன்னேற்பாடாகக் கொண்டு போயிருந்த தோல் பையிலே ஜீவநீரை நிரப்பிக் கொண்டாள். அந்த அதிசய அழகு மரத்தின் கிளையிலே ஒன்றை ஒடித்துக் கொண்டாள். அவள் கையோடு கொண்டுபோயிருந்த கூண்டிலே பேசும் பறவை தானாக வந்து அமர்ந்து கொண்டது. மலையை விட்டுக் கீழே இறங்கலானாள். தன்னைப் பல காலடிகள் தொடர்ந்து வருவது போன்ற உணர்வு ஏற்பட்டது அவளுக்கு. ஆனாலும் அவள் பயப்படவில்லை. அவள் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. தேடி வந்தவைகளையெல்லாம் அடைந்துவிட்ட நிம்மதியினூடே சகோதரர்களைப் பற்றிய தகவல் ஏதும் தெரியவில்லையே என்ற கவலையும் இல்லாமலில்லை. அந்தக் கவலையும், மலை ஏறிய களைப்பும் அவளைச் சற்றே தடுமாறச் செய்தன. அப்போது அவள் தோல் பையிலிருந்த ஜீவ நீர் கொஞ்சம் கீழே சிதறியது. அந்த மந்திர நீர் பட்ட கற்கள் எல்லாம் மனிதர்களாகவும், மங்கையர்களாகவும் மாறி அவளைச் சூழ்ந்து கொண்டு பாராட்டினார்கள். தொழுதார்கள், அழுதார்கள், தங்களைக் காப்பாற்றிய தெய்வம் என்று கொண்டாடினார்கள். தன்னிடமுள்ள ஜீவ நீருக்கு மாய சக்தியால் கல்லாகிக் கிடக்கும் பாறைகளுக்கு உயிரும் உணர்வும் சுய உருவமும் தரும் சக்தி உண்டு என்பதை அறிந்ததும் அவளுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஜீவ நீரை அள்ளி அள்ளி அங்குள்ள விசித்திரமான கற்பாறைகளின் மீதெல்லாம் தெளித்தாள். என்ன விந்தை? கூட்டம் கூட்டமாக மனிதர்கள் 'குபீர் குபீர்' என்று தோன்றினார்கள். அவர்களிலே அவளுடைய சகோதரர்களும் இருந்தார்கள்.

சகோதரர்களையும் மீட்டுக் கொண்டு மாளிகைக்குத் திரும்பினாள். அதிசய மரத்தின் கிளையைத் தோட்டத்திலே நட்டு அதற்கு ஜீவ நீரை ஊற்றினாள். அற்புதமான அழகோடுகூடிய ஏராளமான மலர்கள் பூத்துக் குலுங்கும் மிகப் பெரிய மரமாக வளர்ந்தது அது. பேசும் பறவை அம் மரத்தின் கிளையில் கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துக் குடியும், குடித்தனமுமாக வாழ்ந்தது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் இந்த மூன்று அதிசயங்களையும் காண வந்து கொண்டிருந்தார்கள். அப்படி வந்தவர்களிலே அந்நாட்டு மன்னரின் மகனும் ஒருவன். அவன் காண வந்த அதிசயங்களைவிட அந்தச் சகோதரர்களின் தங்கையின் அழகே அவனுக்குப் பேரதிசயமாகப் பட்டது. யாராலும் முடியாமல் கல்லாகிப் போன எல்லாரையும் உயிர்ப்பித்த அவளது மனோதிடத்தைக் கண்டு பூரித்துப் போனான். அவளையே தன்னுடைய மனைவியாக்கிக் கொள்ளவும் முடிவு செய்தான். அப்படியே அவளை மணந்து கொண்டு அந்நாட்டின் ராணியாக்கினான். இருவரும் சந்தோஷமாக நெடுங் காலம் வாழ்ந்து வந்தார்கள்.

அணு உலக விஞ்ஞானி

நம் வாழும் உலகத்தின் ஒரு மகத்தான புரட்சியை உருவாக்கியவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். அணு உலகுக்கு அஸ்திவாரமிட்ட விஞ்ஞான மேதை. காலம், இடம், பொதுத் தொடர்பு என்ற தத்துவமான 'ரிலேடிவிடி' என்பதைக் கண்டறிந்தவர் இவர்தான். அதுவரை பௌதிக விஞ்ஞானிகள், பொருள் (ஒரு செங்கல், அல்லது ஒரு யுரேனியம் பாளம்) சக்தி (உஷ்ணம்) இரண்டும் வெவ்வேறானவை. இவைகளை உருவாக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது என்ற முடிவோடிருந்தார்கள். ஆனால் ஐன்ஸ்டீன் இவர்களுடைய இந்தக் கொள்கை தவறு என்றார்.

ஒவ்வொரு பொருளிடத்தும் ஏதோ ஓர் அமைப்பில் சக்தி அடங்கியிருக்கிறது என்றார் ஐன்ஸ்டீன். இவருடைய தத்துவப்படி ஒரு பொருளைச் சக்தியாக மாற்றலாம். அதே மாதிரி சக்தியைப் பொருளாகவும் உருவாக்கிக் காட்டலாம். இதை $E = mc$ என்று குறிப்பிட்டார் ஐன்ஸ்டீன். இதன் விளக்கத்தைச் சென்ற இதழில் படித்தீர்களில்லையா? ஐன்ஸ்டீனின் இந்தத் தத்துவத்தின் பெருமையை விளக்க விஞ்ஞானிகளுக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை. இந்தக் கோட்பாடு உண்மையானால் மிகச் சிறிய பொருளினுள்ளும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஆற்றல் அடைபட்டுக் கிடக்கிறது என்றாகும். ஒரு சிறு அணுவைப் பிளக்கும்போது அதிலிருந்து கிடைக்கும் சக்தி இதுவரை மனிதன் கனவுகூட கண்டிராத அளவுக்கு இருக்கும். இயற்கையில் விடுவிக்கப்படாதிருக்கும் பல ரகசியங்களுக்குத் திறவுகோலாக அமைந்தது ஐன்ஸ்டீனின் தத்துவம். ஆரம்பத்தில் ஐன்ஸ்டீனின் கொள்கையை விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரைக் கிறுக்கன் என்று எள்ளி நகையாடினார்கள். ஒரு சூரிய கிரஹணம்தான் விஞ்ஞானிகளின் உள்ளத்திலே மறைந்திருந்த இருளை அகற்றி ஒளியை உண்டாக்கிற்று. அந்தச் சூரிய கிரஹணத்துக்குப் பிறகுதான் ஐன்ஸ்டீன் மகத்தானவர், மாமேதை என்பதை ஒப்புக் கொண்டார்கள். இந்தக் கிரஹணம் ஏற்பட்டது 1918ம் ஆண்டு. வான சாஸ்திரிகள் இருள் மூண்ட வான வெளியின் மூலம் நட்சத்திரங்களிலிருந்து பூமிக்கு வரும் ஒளி சூரியனின் ஈர்ப்புச் சக்தியினால் எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதைக் கண்கூடாகக் கண்டார்கள். ஐன்ஸ்டீன் கூறிய கருத்துக்கு ஒத்ததாக இருந்தது அது. 1932ல் சோதனைச்சாலைப் பரிசோதனைகளும் ஐன்ஸ்டீனின் தத்துவம் உண்மையே என்பதை நிரூபித்தன.

விஞ்ஞான உலகில் மகத்தான மாறுதல்களை, புரட்சியை உண்டாக்கிய ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், 1879ம் ஆண்டு மார்ச் மாதம் 14ந் தேதி ஜெர்மனியிலுள்ள உர்டெம்பர்க் மாவட்டத்திலுள்ள அல்ம் என்ற ஊரில் பிறந்தார். தந்தை மின்இயல் நிபுணர். குழந்தைப் பருவத்தில் மிகுந்த சங்கோஜியாகவும் உணர்ச்சி வசப்படக் கூடியவராகவும் மகிழ்ச்சியில்லாதவராகவும் விளங்கினார். படிப்பில் ரொம்பக் கெட்டிக்காரர் இல்லை. ஆகவே ஆசிரியர்கள் இவரை இளக்காரப்படுத்தி அவமானத்துக்குள்ளாக்கினார்கள். கணிதம் ஒன்றைத் தவிர வேறு எதுவுமே இவர் மூளையில் ஏறவில்லை. அந்தக் காலத்து ஜெர்மனியில் ஏற்பட்டிருந்த அரசியல் எழுச்சியும் இவருக்குப் பிடிக்கவில்லை. கட்டாய ராணுவ சேவையை வெறுத்த இவர் தம் தந்தையிடம் அதிலிருந்து விடுதலை வாங்கித் தருமாறு மன்றாடினார். 1894ல் குடும்பம் இத்தாலி நாட்டுக்குக் குடிபெயர்ந்தது.

ஐன்ஸ்டீனின் பள்ளிப் படிப்பு மியூனிக்கில் தொடங்கினாலும் ஸ்விட்ஜர்லாந்தில்தான் முற்றுப் பெற்றது. பதினேழாம் வயதில் ஜூரிச் நகரிலுள்ள பாலிடெக்னிக் பள்ளியில் பௌதிகமும் கணிதமும் கற்பதற்காகச் சேர்ந்தார். 1900ல் தமது பாலிடெக்னிக் படிப்பை முடித்துக் கொண்டு ஸ்விஸ் நாட்டுப் பிரஜையாக மாறினார். 1905ல் தத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். ஸ்விட்ஸர்லாந்தில் உள்ள பேடண்ட் அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்திலிருந்தபடியே ஒழிந்த வேளைகளில் பௌதிகத்தில் ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தார்.


1905ல் நான்கு கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். ஒவ்வொன்றும் அதனதன் வழியில் புதிய பாதையை வகுப்பனவாக விளங்கின. முதல் கட்டுரை இடம் — காலம் — பொதுத் தொடர்பு (Theory of Relativity) பற்றிய விசேஷத் தன்மை வாய்ந்தது. அடுத்

தது ஒளியைப் பற்றியது. மூன்றாவது பொருள், சக்தி இவைகளைப் பற்றியது. கடைசியாகத் திரவத்திலுள்ள மிகச் சிறு அணுக்களின் சலனம் பற்றியது. ஆரம்பத்தில் ஐன்ஸ்டீனை அலட்சியப் படுத்தினாலும் நாளாவட்டத்தில் அவரது மேதா விலாசம் உணர்ந்து பாராட்டினார்கள். 1909ல் ஜூரிச் சர்வ கலாசாலை தனது பேராசிரியராக அவரை ஏற்றுக் கொண்டது. 'அதே ஆண்டில் பிரேக்கிலுள்ள ஜெர்மானிய சர்வ கலாசாலையும் அவருக்கு அழைப்பு விடுத்தது. 1912ல் பாலிடெக்னிக்கில் பேராசிரியராகப் பதவி ஏற்க மறுபடியும் ஜூரிச் வந்தார். 1913ல் பெர்லினிலுள்ள கெய்ஸர் வில்லியம் கழகத்துக்கு விரும்பி அழைக்கப்பட்டார். முதல் மகா யுத்த காலத்திலும் அங்கிருந்தபடியே தமது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து, 1916ல் தமது தத்துவத்துக்கு முடிவான விளக்கங்களை எழுதி வெளியிட்டார்.

''என்னுடைய கண்டுபிடிப்பு உண்மை என்று நிரூபிக்கப்படுமானால் ஜெர்மனி என்னை மிக உயர்ந்த ஜெர்மன் பிரஜையாக அறிவிக்கும். என் தத்துவம் பொய்யாகுமானால் பிரெஞ்சுக்காரர்கள் என்னை ஒரு ஜெர்மானியன் என்பார்கள். ஜெர்மானியர்கள் என்னை ஒரு யூதன் என்பார்கள்'' என்றார் ஐன்ஸ்டீன்.

அவரது தத்துவம் உண்மை என்று நிரூபணமாயிற்று. ஜெர்மனி அவரை அதன் தவப் புதல்வராக வர்ணித்தது. உலகின் எல்லா நாடுகளுமே அவரது கண்டுபிடிப்பைக் கரகோஷமிட்டு வரவேற்றன. 1921ல் பௌதிகத்துக்கான நோபல் பரிசையும் அளித்துக் கௌரவித்தது. அந்தப் பரிசுத் தொகையை ஐன்ஸ்டீன் பொது மக்கள் நலனுக்காக வழங்கிவிட்டார்.

ஐன்ஸ்டீன் ஒரு யூதர். ஆகவே யூதர் தங்களுக்கென ஒரு தனி ராஜ்யத்தை, தாய்நாட்டை அமைத்துக்கொள்வதற்கு உதவினார். யூத சர்வ கலாசாலை ஏற்படவும் பாடுபட்டார். இதனால், நாஜிகள் ஆதிக்கம் ஜெர்மனியில் ஏற்பட்டபோது ஐன்ஸ்டீன் அவர்களின் முதல் எதிரியானார். இவரது தலையைக் கொண்டு வருவோருக்குப் பெரும் பரிசு தருவதாக அறிவித்தது, நாஜி அரசாங்கம். அப்போது (1932ல்) ஐன்ஸ்டீன் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருந்தார். ஜெர்மனியில் உள்ள இவரது உடைமைகள் சூறையாடப்பட்டன. தாய்நாடு திரும்பிக்கொண்டிருந்தவர் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமை கேட்டு பெல்ஜியம் வரை வந்தவர் திரும்பிவிட்டார். உலக நாடுகளெல்லாம் இந்த மேதையைத் தம்மிடம் வந்துவிடும்படி வேண்டுகோள் விடுத்தன. ஆனால் அவர் தமக்குப் புகலிடமாக அமெரிக்காவையே நாடிப் போனார். நியூஜெர்ஸி மாகாணத்தில் உள்ள பிரின்ஸ்டன் நகரிலுள்ள உயர் ஆராய்ச்சிக் கழகத்தில் ஆயுள் உள்ளவரை பேராசிரியராக இருக்குமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன் தலைவர் இவரிடம்,



ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

''உங்களுடைய சேவைக்காக என்ன சம்பளம் எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார். ஐன்ஸ்டீன் இயற்கையிலேயே மிகவும் எளிமையானவர். குழந்தை மனம் படைத்தவர். மிகவும் சங்கோஜி. கூடியிருந்தவர்களைப் பார்த்தார். பிறகு தம் உள்ளங்கையையே பார்த்துக் கொண்டு வெகு நேரம் நின்றார். எப்படிக் கேட்பது, என்ன கேட்பது என்ற தயக்கம். தாமோ நாடு கடத்தப்பட்டுப் புகலிடம் தேடி வந்திருப்பவர். அதிகமாகக் கேட்டால்



வாசனையை அறியும் மோப்ப சக்தி, பாம்புக்கு அதன் மூக்கில் இல்லை; நாக்கில்தான் இருக்கிறது! எனவே தான் அது அடிக்கடி தன் நாக்கை வெளியே நீட்டுகிறது! — ஆழி

என்ன நினைப்பார்களோ — இதுவே அவரது மௌனத்தின் காரணம்.

தலைவர் மீண்டும் கேட்ட பிறகு திக்கித் திணறியபடி ஐன்ஸ்டீன், ''நான் கொஞ்சம் செலவாளி. ஆயிரம் டாலர் வரை கிடைத்தால் நல்லது. இது அதிகம் என்றால் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள். பரவாயில்லை'' என்றார் படபடப்புடன்.

இதைக் கேட்ட தலைவரும் மற்றையோரும் கலகலவென்று சிரித்துவிட்டார்கள். ஐன்ஸ்டீனுக்கு வியர்த்துக் கொட்டியது. தாம் அதிகமாகக் கேட்டுவிட்டோமோ என்ற அச்சம். அவர்கள் கூறினார்கள், ''ஐயா! ஒரு மாபெரும் அறிவாளியை மேதையை மதிக்கத் தெரியாத முட்டாள்கள் என்று எங்களை உலகினர் தூற்ற வேண்டும் என்று உங்களுக்கு விருப்பமா? ஆயிரம் டாலர் உங்களுக்கு ஊதியமாக வழங்கினால் அது எங்களுக்கல்லவோ கேவலம்? உங்களுக்கு மாதம் ஐயாயிரம் டாலர்களுக்குக் குறைவாகத் தர இயலாது!''

அப்பாவி ஐன்ஸ்டீன் அப்படியே திகைத்துத் திணறித் திக்குமுக்காடிப் போனார். அவர்களுக்கு நன்றி கூறக்கூட மறந்தவராகச் சிலையாகி நின்றார். 1940ல் ஐன்ஸ்டீன் அமெரிக்கப் பிரஜையானார்.

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாயிற்று. யுரேனியம் அணுவைப் பிளக்கும் வழியை விஞ்ஞானிகள் கண்டார்கள். பொருளைச் சக்தியாக மாற்றலாம் என்ற ஐன்ஸ்டீனின் தத்துவமும் சேரவே யுரேனியம் அணுக்களைக் கொண்டு மிகச் சக்தி வாய்ந்த வெடிகளைத் தயாரிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள் விஞ்ஞானிகள். ஹிட்லரிஸத்தை வெறுத்தவர் ஐன்ஸ்டீன். அணுகுண்டு தயாரிப்பில் ஜெர்மனி ஈடுபட்டால் பிறகு உலகுக்கு விடிமோட்சமே கிடையாது என்று நம்பினார். அவர்களுக்கு முன்னதாக அணுகுண்டு தயாரிப்பில் அமெரிக்கா ஈடுபட்டு வெற்றி பெற வேண்டும் என்றும் ஆசைப்பட்டார். ஹங்கேரி நாட்டு விஞ்ஞானிகள் இருவர் அமெரிக்கப் பிரஜைகளாகி ஐன்ஸ்டீனுடன் ஆராய்ச்சி செய்து வந்தனர். அவர்களின் தூண்டுதலும் சேரவே அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வெல்டுக்கு ஐன்ஸ்டீன் ஒரு கடிதம் எழுதினார், அமெரிக்கா அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட வேண்டும் என்று. அதன் விளைவுதான் அமெரிக்கா அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டு, வெற்றி கண்டு, ஜப்பானில் ஹிரோஷிமாவில் அணுகுண்டுகளையும் வீசி மகத்தான அழிவை ஏற்படுத்தி யுத்தத்தை முடித்து வைத்தது.

அணு ஆயுதத்தின் பயங்கரம் பற்றி விளக்கி எதிரிகளைப் பீதியுறச் செய்ய வேண்டும் என்று மட்டுமே விரும்பினார் ஐன்ஸ்டீன். அதைப் பயன்படுத்தி மனித குலத்தை மாய்த்து அழிப்பதை வெறுத்தார். ஆனால் சர்வ வல்லமை பெற்ற ஒரு சக்தியை வைத்துக் கொண்டு எந்த அரசாவது சும்மா இருக்குமா? அதுவும் அமெரிக்கா போன்ற ஒரு நாடு? யுத்தத்தையும், அணு ஆயுதத்தையும் வெறுத்த ஐன்ஸ்டீன் இரண்டாம் உலகப் போருக்குப் பின் தம் பதவியிலிருந்து விலகி ஓய்வு பெற்று வாழ்ந்து வரலானார். 1955ல் காலமாகும் வரை தமது ஆராய்ச்சிகளை மட்டும் அவர் தொடர்ந்து செய்து வந்தார்.

நவீன பௌதிக உலகின் தந்தை என்று வர்ணிக்கப்படும் ஐன்ஸ்டீன் மாபெரும் அறிவாளியானாலும் மிக மிக எளியவர். சின்னஞ்சிறு உருவம். கூரான மூக்கு, ஒளிவிடும் கண்கள், தலையிலே தாறுமாறான வெள்ளை கேசம். பிரின்ஸ்டன் நகரில் படுக்கையறைக் காலணியுடனேயே பவனி வரும் அதிசய மனிதர். குளிக்கவும், க்ஷவரம் செய்யவும் ஒரே சோப்பை உபயோகிக்கும் சிக்கனமானவர். ஒரு சமயம் கோடீசுவரரான ராக்ஃபெல்லர் அளித்த 1500 டாலர்களுக்கான செக்கை மனைவியிடம் தர மறந்து போய் அதை ஒரு புத்தக அடையாளமாக வைத்திருந்தார். கடைசியில் அந்தப் புத்தகத்தையே தொலைத்துவிட்டார். அந்த அளவுக்கு மறதிக்காரர். விஞ்ஞானத்துக்கு அடுத்தபடி சங்கீதத்தை உயிராக மதிக்கக் கூடியவர் ஐன்ஸ்டீன். எப்போதும் அவர் கையில் வயலின் இருக்கும். ஆனால் அதை அவர் மீட்டுவதை யாராலும் கேட்டுச் சகிக்க முடியாது!



கிளி

சொன்ன சொல்லைத் திருப்பி யிங்கே
சொல்லும் பறவை கிளியாகும் !
கன்னிப் பெண்கள் மனங்க வர்ந்தே
கனிமொழி பயில்வது கிளியாகும்!

சோலைத் தென்னந் தோப்பி னுள்ளே
சிறப்பாய் பசுமைக் கிளியிருக்கும்
சாலைக் கிளிக்கே வான்வெ ளியாம்
சாய்மரப் பொந்தே குடிலாகும்!

கொவ்வைக் கனிபோல் மூக்கி ருக்கும்
கழனிக் கதிர்நிற உடலாகும் !
செவ்வை நிறமெனில் கிளிய தனின்
செம்மை உளத்தைக் கொடுத்திடுமே!

இச்சைக் கிளிகள் நெஞ்சி னிலே
இங்கே நினைவில் வீற்றிருக்கும் !
பச்சைக் கிளியைப் பழக்கி வைத்தே
பலர்பிழைப் பதனுல் நடத்துகின்றூர்!

மதுரை நகரை ஆளு கின்ற
மீனவர் பெற்ற மீனுட்சி !
பதுமை யாக வலக்க ரத்தில்
பச்சைக் கிளிதான் தரும் காட்சி !

கிளிபோல் இருப்போர்க் கிவ்வுலகில்
கிட்டும் வாழ்வே சிறைச்சாலை !
தெளிவை நமக்கே எடுத்தி யம்ப
தமிழ்நூல் சாற்றும் புகழ்மாலை !

ஒன்பதாம் தோகையார்
ஆற்றரசு




எழுத்தும் எண்ணமும்

இ

இனிப்பு மிட்டாய் இனிப்பு மிட்டாய்
இதோ பாருங்கோ! இங்கே
இருப்ப தெல்லாம் எடுத்துக்கொள்ள
இங்கே வாருங் கோ !

இல்லை என்னும் நிலைமைஇங்கே
இல்லவே இல்லை ! இங்கே
இருப்பதை நாம் பகிர்ந்துகொண்டால்
இல்லையே தொல்லை !



எ

எருமை ஒன்றின் காதிலே
எறும்பு புகுந்து கொண்டது
எறும்பு காதில் புகுந்த தால்
எருமை துள்ளிக் குதித்தது

எருமை மிகப் பெரியது
எறும்பு மிகச் சிறியது.
எனினும் அந்த எறும்பினுல்
எருமை துள்ளித் துடித்ததேன்?

எருமைக் காலில் சிக்கினுல்
எறும்பு நசுங்கிப் போய் விடும்!
எறும்பு, காதில் நுழைந்த தால்
எருமை துள்ளித் துடித்தது !

ஐ

ஐயா மாரே ஐயாமாரே
இங்கே வாருங்கோ — எங்க
ஐய ஹுரு சாமி கோயில்
குதிரை பாருங் கோ !



ஐந்து பத்து பணம் கொடுத்துச்
செய்த தில்லீங்கோ—அந்த
ஐயன் தந்த அருளி னுலே
செய்த திருங் கோ.

ஓ

ஓரே ஓர் ஊரிலே
ஓரே ஓர் ஒட்டகம்
ஒட்டகத்தின் முதுகிலே
ஒன்பது பேர் ஊர்வலம்!

ஒன்பது பேர் சுமையினை
ஒட்டகமே தாங்குமோ?
ஓரே அடி வைத்ததும்
ஒடுங்கிப் படுத்துக் கொண்டது!

ஒட்டகத்தின் எதிரிலே
ஒருவர் மட்டும் இறங்கவே
ஒட்டகமும் எழுந்தது
ஒய்யாரமாய் நடந்தது!

— ரா. பொன்ராசன்.




களைப்பே அடையாத ஹனுமார் இலங்காநகரின்
அழகைக் கண்டு களிக்கிறார்.
18
ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி. சித்திரம்: விஜு
ஆஹா! எவ்வளவு அழகான
நகரம் இது? எத்தனைக்
கட்டுக் காவல்?
இந்நகரத்து அரக்கர்களுடன்
நாம் வம்புக்குப் போகவேண்டாம்.
சீதாதேவியைக் கண்டு தரிசித்துத்
திரும்புவோம். இந்த உருவத்துடன்
நகருள் போகக்
கூடாது. ஒரு
பூனை அளவுக்குச்
சிறிய உருவை அடைவோம்.
மாலை மயங்கும்
வேளை. நகரில் தீபங்கள்
ஏற்றத் தொடங்கிய நேரம்.
ஹனுமார் கோட்டை
வாசலை நெருங்கினார்.
ஓர் இரும்புக் கரம்
அவரைப் பிடித்துக்
கொண்டது.
ஏ குரங்கே! இந்த
இலங்கிணியிடமிருந்து
யாராலும் தப்பிப்
போக முடியாது.
இலங்காநகரின் காவல்காரியான
இலங்கிணியின் அசுரப் பிடியில்
மூச்சுத் திணறுகிறது ஹனுமாருக்கு.
இவளுடன்
இந்தச் சிறிய வடிவில்
போரிட முடியாது.
என் விசுவரூபத்தை
எடுக்கிறேன்.
ஹனுமனே!
போதும். மேலும்
குத்தாதே என்னை.
என்று நான் ஒரு
வானரத்திடம்
அடி வாங்கி விழுகிறேனோ,
அன்றுதான் இலங்கைக்கு அழிவு காலம் என்றார் பிரம்மா,
அது வந்து விட்டது. உன்னைத் தடுக்க நான் யார்?
நீ போய் வா.....


ஹனுமார் மறுபடி சிறு குரங்காக மாறி மதில் மீதேறி இலங்கைக்குள் குதிக்கிறார்.
ஒவ்வொரு வீடாகச் சீதாதேவியைத் தேடிக் கொண்டு போகிறார் ஹனுமார்.
என்ன கோரமான உருவங்கள்? அதோ தூரத்தில் வெள்ளிமலை போலத் தெரிவதுதான் இராவணனுடைய அரண்மனையாக இருக்கவேணும்.
இந்திராதி தேவர்களை வென்றவனில்லையா? அத்தனை செல்வங்களையும் கொண்டு வந்து இங்கு நிரப்பியிருக்கிறான்... அதோ புஷ்பக விமானம்.
இணங்காத பெண்ணைப் பலாத்காரம் செய்தால் அவன் தலை சுக்கலாக வெடிக்கும் என்று சாபமிருப்பதால் இவனிடம் மையல் கொண்டோட இவ்வளவு பெண்களும் வந்திருக்க வேண்டும்.
எத்தனை வீரமிருக்கென்ன? அன்னை சீதாவை அபகரிந்த இந்த துராத்மாவை இப்படியே ஒரே அடியில்.... கூடாது.
அன்னையைக் கண்டு வர அனுப்பப்பட்ட தூதன் நான். அன்னையைத் தேடுவோம்.
தொடரும்

நான்கு ரகசியங்கள்

வெகு காலத்துக்கு முன்னாலே ஆப்பிரிக்காவில் உள்ள நைஜீரியா என்ற நாட்டில் ஒரு தத்துவ ஞானி வாழ்ந்து வந்தார். இவர் மிகச் சிறந்த அறிவாளி, ஞானியுங்கூட. இவர் அடிக்கடி சொல்லுவார், 'உன்னுடைய தாயார், தகப்பனார், உன்னுடைய மூத்த மகன் இவர்களின் வார்த்தைகளைக் கேட்டு அதற்கு மதிப்புக்கொடு. ஆனால் உன் மனைவி, உன் அடிமை வேலைக்காரன் இவர்களின் யோசனைகளைக் கேட்காதே' என்று. 'ஒரு மனிதனுக்கு ஒரே ஒரு உயிர்த் தோழன் தான் இருப்பான். நண்பர்களைப் போலப் பலர் தோன்றினாலும் உண்மையாக உன்னை நேசித்து நட்புப் பாராட்டுவது ஒரே ஒருவனாகத்தானிருக்கும்' என்றும் சொல்லுவார் இந்த மேதை. இதை விளக்க அவர் ஒரு கதையையும் கூறுவார்.

ஒருவனுக்குப் பல நண்பர்கள் இருந்தார்கள். இவர்களில் உண்மையான நண்பன் யார் என்பதை அறிய எண்ணினான் அவன். ஒரு நாள் ஒவ்வொருவரிடமும் போய், 'நான் மன்னரின் மகனைக் கொன்றுவிட்டேன்' என்று கூறினான். எல்லோரும் உடனே பீதியடைந்து தங்கள் வீட்டுக் கதவை மூடிக் கொண்டார்கள், ஒரே ஒருவனைத் தவிர. அந்த ஒருவன் இவனிடம் 'வா, நாம் இருவரும் எங்காவது ஓடிவிடலாம். நீ தப்பி ஓட நான் உனக்கு உதவுகிறேன்' என்றான். உபசாரத்துக்கு அவன் இப்படிக் கூறவில்லை. உண்மையாகவே தன்னுடைய இளமனைவியைப் பிரிந்து அவனுடன் தப்பி ஓடுவதற்குத் தயாராகி விட்டான். இத்தனை பேர்களில் அவன் ஒருவன் தான் தன்னுடைய நல்வாழ்வில் அக்கரை கொண்ட நண்பன் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். ஆகவே உத்தம நண்பன் ஒரே ஒருவன் தானிருக்க முடியும்' என்பார் அந்தத் தத்துவ ஞானி.

இந்த ஞானிக்கு ஒரு குழந்தை இருந்தது. அவருடைய இனத்தவர்களின் மரபுப்படி அவர் தம் குழந்தையின் தலையை மொட்டையடிக்கவில்லை. தலையின் நான்கு பக்கமும் பிடிகுடுமிகளை வளர்த்து விட்டிருந்தார். "இந்த ஒவ்வொரு (கொத்து) பிடி குடுமியும் ஒவ்வொரு ரகசியத்தைத் தன்னுள் வைத்துக் கொண்டிருக்கிறது. இவை எனக்கும் என் மனைவிக்கும் மட்டுமே தெரியும்" என்று தன் குழந்தையின் விநோதக் குடுமி அமைப்பைப் பற்றிக் கேட்பவரிடம் எல்லாம் கூறி வந்தார். ஆனால் அந்த ரகசியம் என்ன என்பதை அவர் யாரிடமும் கூறியதில்லை. அவரைப் பராமரித்த அரசரிடமும் கூட அவர் அந்த ரகசியங்களைக் கூறியதில்லை. பல ஆண்டுகளாகப் பராமரிக்கும் தன்னிடமே கூட அவர் இந்த ரகசியங்களைக் கூறாதது மன்னருக்கு வேதனையாக இருந்தது. அதை எப்படியும் அறிந்து கொண்டுவிடத் துடிப்பாக இருந்தார். அந்த அறிவாளியின் மனைவியை அழைத்துச் சாதுரியமாகப் பேச்சுக் கொடுத்து அந்த ரகசியங்களை அறிய முற்பட்டார்.

உறுதியில்லாத உள்ளமும் ஓட்டைவாயினளுமான அவள் மன்னரிடம் அந்த ரகசியங்களைக் கூறிவிட்டாள். முதல் உண்மை, மன்னர் உன் உண்மையான தோழனல்ல; அவன் உன்னைக் காப்பாற்ற மாட்டான். இரண்டாவது உன் மனைவியின் முன்னாள் கணவனின் மைந்தன் உன்னுடைய மகனாகமாட்டான். அவன் உனக்கு விரோதிதான். மூன்றாவது உண்மை ஒருவன் தன் மனைவியை நேசிக்கலாம் அன்பு காட்டலாம். ஆனால் அவளிடம் எவ்விதமான ரகசியத்தையும் சொல்லக் கூடாது. கடைசியும் நான்காவதுமான உண்மை, இந்த உலகத்துக்கு அவசியமான தேவை முதியோர்கள். இவைகளைக் கேட்ட மன்னன்



கடைசி மூன்றைப் பற்றி அதிக அக்கறை காட்டவில்லை. ஆனால் முதல் உண்மை அவனை வெகுவாகப் பாதித்துவிட்டது. உடனே அந்தத் தத்துவ ஞானியைக் கைது செய்து சிரச்சேதம் செய்ய ஆணையிட்டான். வீரர்கள் வேகமாகச் செயல்பட்டார்கள். இதைக் கேள்விப்பட்டதும் ஊரில் உள்ள முதியோர்கள் மன்னனிடம் சென்று அந்த அறிவாளியை விடுவிக்குமாறு மன்றாடினார்கள். 'அவர் நேர்மையாக உங்களுக்குப் பல காலம் உழைத்திருக்கிறார்' என்று எடுத்துக் கூறினார்கள். மன்னரும் நாட்டிலுள்ள பெரியோர்களின் வேண்டுகோளுக்கு இணங்கினான். அப்போது அந்தத் தத்துவ ஞானியினுடைய மனைவியின் மூத்த கணவனின் மகன் அங்கு வந்து விலங்கிடப்பட்டு நிறுத்தி இருந்தவரின் உடலிலிருந்த ஆடைகளை உருவி எடுத்துக்கொண்டான். ''இவருடைய சொத்துக்களுக்கு வாரிசு நான். இந்த உடைகள் ரத்தக் கறைபட்டு வீணாவதை நான் விரும்பவில்லை'' என்றான் அவன்.

அரசன் இப்போது ஏளனமாக ''உன் உண்மைகள் (ரகசியங்கள்) என்னவாயின?'' என்று கேட்டான். அதற்கு 'அவை உண்மைகளாகவே ஒளிவிடுகின்றன' என்றார் ஞானி.


''எப்படி ?'' என்று கேட்டான் மன்னன்.

''மன்னன் நண்பனாகவோ காப்பாளனாகவோ இருக்கமாட்டான் என்பதைத் தாங்கள் சற்றும் சிந்தியாமல் என்னைக் கொல்வதற்கு ஆணையிட்டதிலிருந்து உறுதிப்படுத்தி விட்டீர்கள். மனைவியிடம் எந்த ரகசியத்தையும் சொல்லக் கூடாது என்பதற்கு என் மனைவியின் செயலே உதாரணமாகி விட்டது. என் மனைவியின் முதல் கணவனின் மகன் எனது விரோதி என்பதை இதோ நான் ஒரே ஆடையையும் பறிகொடுத்து நிற்பதிலிருந்து தெரியவில்லையா ? கடைசி உண்மை. நான் உயிரோடு இப்போது உங்களுடன் பேசிக் கொண்டிருப்பதற்குக் காரணமான இந்நாட்டின் முதியவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்றார். மன்னர் வெட்கித் தலை குனிந்தார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? — வி. கே.

பாலு சொல்லுகிறான் :

ஒருநாள் கடற்கரைக்குப் போயிருந்தேன். கடற்கரை ஓரமாக அலைகளின் ஆரவாரத்தை ரசித்தபடியே வெகு தூரம் போய் விட்டேன். மனித நடமாட்டமே இல்லாத தன்னந் தனிமையான ஒரு பகுதியில் நான் மட்டும் நின்று கொண்டிருந்தேன். முதலில், அது எனக்குப் புதிய அனுபவமாக மகிழ்ச்சியாக இருந்தாலும் கொஞ்ச நேரத்தில் நெஞ்சுக்குள் ஒரு மூலையில் ஏதோ ஒரு உணர்வு குறுகுறுக்கலாயிற்று. அதுதான் பயமோ ?


அப்போது ஒரு பெரிய அலை வந்து என் கால்களின் மீது மோதியது. மோதிய அலை ஆர்ப்பாட்டத்துடன் மறுபடி கடலில் வழிந்தோடியபோது நுரை மூடிய ஈர மணலில் ஏதோ ஒரு பொருள் மணலுள் பாதி புதைந்தபடி கிடந்தது. அருகில் சென்றேன். அதைக் கையிலெடுத்தேன். அது ஒருவிதமான பழங்காலத்துப் பாட்டில். எங்கள் ஊர் ஊதுபத்தி சந்தனக் கடையில் பலவிதமான ஸெண்ட்பாட்டில்களைப் பார்த்திருக்கிறேன். அவைகளுக்குக் கண்ணாடியிலேயே தக்கை போன்ற மூடி போட்டு மூடி இருப்பார்கள். அது நினைவுக்கு வந்தது. அதோடு அரபுக் கதைகளைப் படித்ததும் நினைவுக்கு வந்தது. அதில் இப்படித்தானே ஒருவனுக்குக் கடலில் ஒரு பாட்டில் கிடைக்க அதைத் திறந்த போது ..? இப்படி எதை எதையோ எண்ணிக் கொண்டு அந்தக் கண்ணாடிக் குப்பியுடன் என் வீட்டை நோக்கி நடந்தேன்....




பலே பாலுவும் பாட்டில் பூதமும்

பலே பாலுவும் பாட்டில் பூதமும் 1

கதை: வாண்டு-சித்திரம்: செல்லம்




நாய்க்கு விடுதலை அளிக்கிறேன். அப்போது யார் பலசாலி என்பது தெரியும்.
பாட்டில் பூதமே! கிடைக்குது போதனும் வருகிறாயா?
ஹ...ஹ்ஹா.. ஹ்...ஹா...
மாடசாமியா? நல்லா வேணும்! தான் பெரிய சண்டியன்னு நினைப்பு அவனுக்கு.
எல்லா சாமானையும் சரியா அளந்து போடப்பா.
பாவுப் பயலுக்கு இப்படியொரு வேலைக்காரன் எப்போ கிடைச்சான்? ஐ, அப்பா! என்ன உயரம், என்ன உடம்பு!
பாவுவை மடக்க மறைந்திருக்கிறான் மாடசாமி.
என்னடா மாடு! உன் மூக்கை இப்படித் திருகும் போது எனக்கு என்ன குஷியா இருக்குத் தெரியுமா!
டேய், பொடியா, என் மூக்கைத் திருக உனக்கு என்ன தைரிய... ஐ...ய்..யோ..!
ஊய்... வீ... வீ...
பட்டாக் கத்தியால் அவன் பின் பக்கத்தில் பட்டை தீட்டி விட்டேன், பயல் மறக்க மாட்டான்... ம்...பிரபுவே, என் பெயர் ஷேர்தில். அதைச் சொல்லியே கூப்பிடுங்கள்.
இனி அப்படியே அழைப்போம்!

(தொடரும்)



ஐந்து சகோதரர்கள்

● கே. ரமேஷ் ●

சீன தேசத்தில் ஒரு சமயம் ஐந்து சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் ஐவரும் தங்கள் தாயுடன் கடலுக்கருகில் ஒரு சிறிய வீட்டில் இருந்தார்கள். அந்தச் சகோதரர்கள் ஒரே உருவமும், தோற்றமும் உடையவர்களாக இருந்ததால் அவர்களில் யாரையுமே அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது.



முதல் சகோதரனுக்குக் கடல் தண்ணீரையெல்லாம் வாயில் நிரப்பிக் கொள்ளும் அபூர்வ சக்தி உண்டு. ஆகலால் அவன் தண்ணீரை வாயில் நிரப்பிக் கொண்டு கடலுக்கடியில் உள்ள விதவிதமான அழகிய மீன்களை எல்லாம் பிடித்து ஊரில் விற்று நிறையப் பணம் சம்பாதிப்பான். ஆனால் இவன் செய்யும் இந்தக் காரியம் அவனுடைய சகோதரர்களுக்கும் தாயாருக்கும் மட்டுமே தெரியும்.

இரண்டாமவனின் உடல் கல்லைப் போல் கெட்டியாக இருக்கும். அவனுக்கு உடலில் காயம் ஏற்படாது. அதனால் அவன் சிங்கம், புலி, முதலை முதலியவற்றோடு விளையாடுவான். அவை கடித்தால்கூட அவனுக்கு வலிக்காது. இதுதான் இரண்டாமவனிடமுள்ள அதிசயமான சக்தி.

மூன்றுமவன் தன் உடலை மிக உயரமான இடத்துக்கும் மிகச் சிறிய இடத்துக்கும் ஏற்றவாறு நீட்டிக் கொள்ளவும் சுருக்கிக் கொள்ளவும் கூடிய அபூர்வ வல்லமை பெற்றவன். அதனால் அவன் கடலைக்கூடத் தாண்டிவிட முடியும்.

நாலாமவனின் உடலைத் தீயானது பொசுக்கவோ எரிக்கவோ முடியாது. அத்தகைய சக்தி அவனுக்கு. ஆகையால் அவன் இரவில் விறகுக் கட்டையில் தீ மூட்டி அதில் போய் உறங்குவான்.

ஐந்தாமவனுக்கும் ஓர் அபூர்வ சக்தி உண்டு. அது யாதெனில் அவனுக்கு மூச்சு விடுவதற்குக் காற்றே தேவையில்லை. காற்று இல்லாமல் எந்த இடத்திலும் எவ்வளவு நேரமானாலும் கவலையில்லாமல் இருப்பான்.

இத்தகைய சக்திகள் கொண்ட இவர்கள் தங்கள் சக்திகள் யாருக்கும் தெரியாமல் இருக்க மறைவாகவே தத்தம் காரியங்களைச் செய்தார்கள். அப்படியும் ஒரு நாள் விதி விளையாடி விட்டது.

ஒரு சமயம் முதலாமவன் மீன் பிடித்து வருகையில் சிலர் அவனை மடக்கி நீ மீன் பிடிக்கும் விதத்தை எங்கள் பிள்ளைகளுக்கும் சொல்லித் தர வேண்டுமென்றார்கள். ''நாங்கள் உன்னை எவ்வளவோ தடவை வேண்டினோம். நீ கேட்கவில்லை. அதனால் நாளை நீ எங்கள் பிள்ளைகளுக்கு இத்தகைய மீன்களைப் பிடிக்கும் வழியைச் சொல்லித் தர வேண்டும். இல்லாவிடில் உன்னைக் கொன்று விடுவோம்'' என்றார்கள்.

பாவம் மூத்தமவன்! என்ன செய்வான்? தான் அவர்களுக்கு மீன் பிடிக்கும் வழியைச் சொன்னால் ஏதேனும் விபரீதம் நிகழுமோ என அஞ்சினான். கூறு விட்டாலோ, உயிர் போகும். ஆகையால் சொல்லிவிடுவதே நல்லது எனத் தீர்மானித்தான்.

மறு நாள் அவர்களின் பிள்ளைகளுடன் அவன் கடலுக்குச் சென்றான். அதற்கு முன் அவன் எச்சரித்தான். ''என்னால் தண்ணீரை வாயில் சிறிது நேரம்தான் வைத்துக் கொள்ள முடியும். முடியாத போது சைகை காட்டுவேன். அதை நீங்கள் பார்த்தவுடன் வெளியே வந்து விட வேண்டும். இல்லையென்றால் நீங்கள் மூழ்கி இறப்பீர்கள்'' என்றான்.

அவர்களும் சரி என்று கூறவே அவன் தண்ணீரை உறிஞ்சி வாயில் அடக்கினான். சிறுவர்கள் உள்ளே சென்று மீன்களைப் பொறுக்காமல் சிரித்து விளையாடினார்கள். நேரம் சென்றது. அவன் சைகை செய்தான். ஆனால் ஒருவன்கூட அவனைப் பார்க்கவில்லை. முதலாமவனுக்கு வெகு நேரம் தண்ணீரை வைத்துக் கொள்ள முடியாததால் அவன் அதை உமிழ்ந்தான். பிறகு என்ன! ஊர்ப் பிள்ளைகள் எல்லாரும் நீரில் மூழ்கி இறந்தார்கள்.

இச்செய்தியைக் கேட்ட மக்கள் வெகுண்டார்கள். ''அவன் தலையை வெட்டுங்கள்'' என்றனர். நீதிபதியின் முன் முதலாமவன் நிறுத்தப்பட்டான்.



நீதிபதியிடம் தான் வீட்டுக்குப் போய் வந்து விடுவதாகவும் அதற்கு அனுமதி தருமாறும் வேண்டிக் கொண்டான். அவரும் அதற்குச் சம்மதித்தார். வீட்டுக்குச் சென்ற அவன் இரண்டாமவனை அனுப்பினான். அவன் உடல்தான் கல் ஆயிற்றே. அவனை எப்படி வெட்ட முடியும்? இவரும் ஒரே மாதிரி இருப்பதால் ஊராருக்கு அடையாளம் தெரியவில்லை. மக்களின் விருப்பப்படியே நீதிபதி அவனுக்கு மரண தண்டனை விதித்தார். அவன் தலையைக் குனிய ஒருவன் கூரிய அரிவாளால் அவன் தலையை வெட்டினான். அப்போது ஓர் அதிசயம் நடந்தது. வெட்டியவன் கையில் இருந்த அரிவாளின் ஒரு புறம் நசுங்கி மழுங்கிப் போய் இருந்தது. இதைக் கண்ட மக்கள் மேலும் கோபம் கொண்டனர். அவர்கள், ''சரி, நாளை இவனைக் கடலில் மூழ்கடித்து இறக்க வைக்கலாம் என்று கூறினர். இரண்டாமவன் வீடு திரும்பி மறுநாள் மூன்றாமவனை அனுப்பினான். அவனால்தான் தன் உடலை வளர்த்துத் தண்ணீருக்கு மேலாகத் தலையை நீட்ட முடியுமே! அவனை எப்படி மூழ்கடிப்பது?

மறு நாள் மூன்றாமவன் கடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அவன் இரண்டாமவனைப் போலவே இருந்ததால் அவனைச் சந்தேகிக்க முடியவில்லை. அவன் கடலில் தள்ளப்பட்டான். அவன் தன் உடலை இடத்துக்குத் தக்கபடி நீட்டிக் கடலின் தரையில் நின்று தலையை நீருக்கு வெளியே நீட்டினான். இதைக் கண்ட மக்கள் அவனை மூழ்கடிக்க முடியாது என அறிந்து உயிரோடுஎரிக்க முடிவு செய்தனர்.

மூன்றாமவன் ஊராரின் அனுமதியுடன் இல்லம் அடைந்து நாலாமவனை அனுப்பினான். உருவம் ஒரே மாதிரி இருந்ததால் யாரும் சந்தேகப்படவில்லை.



நாலாமவன்தான் நெருப்பில் தூங்குபவனாயிற்றே! அவன் எப்படித் தீயில் இறப்பான்! இதை அறியாத மக்கள் அவனைப் பெருந் தீயில் கை கால்களைக் கட்டித் தள்ளினார்கள். அவனோ அத்தீயில் உல்லாசமாகப் போய் உட்கார்ந்தான். கோபம் அடைந்த மக்கள் தீயைப் பெரிதுபடுத்தினார்கள். அப்போதும் அவன் கவலையில்லாமல் இருந்தான். இதைக் கண்ட மக்கள் அவனை விடுவித்துக் காற்று இல்லாத ஓர் அறையில் மறுநாள் உயிருடன் தள்ளி மூச்சுத் திணறச் செய்து சாகடிக்கத் திட்டமிட்டனர்.

பின்னர் நாலாமவன் வீடு திரும்பி ஐந்தாமவனை அனுப்பினான். அவனுக்குத்தான் காற்றே தேவையில்லையே! ஆகையால் அவன் கவலையற்று மறுநாள் அவர்கள் தள்ளிய அறையுள் சென்று நன்றாகப் படுத்து உறங்கினான். மூன்று நாட்கள் கழித்துக் கதவைத் திறந்தபோது அவன் கொஞ்சமும் சோர்வின்றி உயிருடன் வெளியே வந்தான். இதைக் கண்ட மக்களும் நீதிபதியும் ஆச்சரியம் அடைந்தனர்.

பின்னர் நீதிபதி, "இவனை நாம் தலையை வெட்ட முயன்றோம், கடலில் மூழ்கடிக்க நினைத்தோம், எரிக்க நினைத்தோம், முடிவாக மூச்சு முட்டச் செய்து சாகடிக்கப் பார்த்தோம். இவைகளில் எல்லாம் தப்பிய இவன் சாதாரண மனிதன் அல்ல, தேவ புருஷன்" என்றார். மக்களும் அவனிடம் தங்களை மன்னிக்க வேண்டினர்.

ஆனால் ஐந்து சகோதரர்களும் ஒருவருக்கொருவர் உதவியது பாவம் மக்களுக்குத் தெரியவில்லை. இக்கதை இன்றும் சீன மக்களால் சொல்லப்படுகிறது.

ஓ, அப்படியா!

பட்டு: தேனீயே, தேனீயே! நீ பூக்களிலிருந்து தேனை எடுத்துச் செல்லாமல் இந்த மிருதுவான மண்ணை உருட்டிக் கொண்டு போகிறாயே ஏன்?

தேனீ: நீ நினைக்கிறபடி நான் தேன் சேகரிக்கும் தேனீயல்ல. எங்களைப் பார்த்ததும் பொதுவாகத் தேனீ என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் வேலைக்காரத் தேனீக்களாகிய எங்களிடையே எத்தனையோ பிரிவுகள் உண்டு. நான் கொத்தனார்த் தேனீ. என்னுடைய வகைக்கு ஆஸ்மியா (Osmia) என்று பெயர். பூமியில் வீடுகள் கட்டுவது எங்கள் வேலை. என்ன பிரமிக்கிறாய்?

பட்டு: இல்லை, தேன் கூடுகளை மரக்கிளைகளிலும் பாறை இடுக்குகளிலும் தான் பார்த்திருக்கிறேன் நீ என்னடாவென்றால்.....

தேனீ: உன் சந்தேகமும் நியாயமானதுதான். மரக் கிளைகளிலும் பாறை இடுக்குகளிலும் தான் தேன்கூடுகளைக் கட்டுவோம். சில இடங்களில் பூமியிலும் குழி தோண்டிக் கூடு அமைப்பது உண்டு. அம்மாதிரி அமைக்கப்படும் தேன் கூடுகளில் நீர் உட்புகாதபடி சிமிண்ட் பூச்சுக் கொடுப்பதில் வல்லவர்கள் நாங்கள்

பட்டு: சிமிண்ட் பூச்சா? எங்களுக்கே இப்போது கிடைக்காத அந்தப் பொருள் உங்களுக்கு...?


தேனீ: சாதாரண சிமிண்ட்டல்ல. நீங்கள் வாட்டர் புரூஃப் சிமெண்ட் என்கிறீர்களே அதையாக்கும் நாங்கள் தயாரித்து கூட்டுக்குப் பூசுவோம். முதலில் கரடு முரடான கூட்டின் உட்புறத்தைக் களிமண் கொண்டு பூசுவோம். இதன் பிறகு தண்ணீரால் நனையா விசேஷ சிமெண்ட் தயாரித்து வளை (கூடு) யின் உட்பக்கம் முழுதும் பூசி விடுவோம். இதற்குக் கொல்லுறுவாக எங்கள் பெரிய நாக்கு பயன்படுகிறது. எங்கள் நாக்கினால் சிமெண்ட் பூச்சை அழுத்தி, சமமாகவும் வழுவழுப்பாகவும் ஆக்கி விடுவோம்.

பட்டு: சிமெண்ட் தயாரித்து என்கிறாயே, அதை எப்படித் தயாரிப்பாய்? ஏதாவது சிமிண்ட் தொழிற்சாலை இருக்கிறதா, என்ன?

தேனீ: (சிரித்து): எங்கள் உடல்தான் சிமிண்ட் தொழிற்சாலை. இந்த மிருதுவான மண்ணைக் கொண்டு போகிறேனல்லவா? எங்கள் வாயில் மட்டுமே சுரக்கும் ஒருவகை (சலைவா) திரவத்துடன் மண் கலந்தால் அது வாட்டர் புரூஃப் சிமிண்ட் ஆகி விடும். புரிந்ததா?







■ அருகிலுள்ள படத்தில் ஒரு மிருகக் காட்சிசாலையே இருக்கிறது. இலைகளின் நடுவே பல மிருகங்கள் மறைந்து இருக்கின்றன. படத்தைத் திருப்பித் திருப்பிப் பாருங்கள். எல்லா மிருகங்களையும் கண்டுபிடிக்கலாம். முடியவில்லை என்றால் 23ம் பக்கம் தள்ளிப் பார்க்கவும்.

ஆ. தேவராஜு

கண்டுபிடி

மரத்தின்மீது உட்கார்ந்து கொண்டுள்ள குரங்கு தன் சிநேகிதனைப் பழம் சாப் பிடக் கூப்பிடுகிறது. கீழுள்ள குரங்குக்கு வாழைப் பழத் துக்கு ஆசையாக இருந்தா லும் மரத்தின் மீது போக வழி தெரியவில்லை. அதற்கு வழி காட்டுங்களேன்.



OBM-1898-TM

பால் குடிக்க மறுக்கும் பிள்ளைக்கு பல்சுவையுள்ள கஸ்டர்டு தாருங்கள். அது அள்ளிப் பருகுவதைப் பாருங்கள்!

சூ..சூ..சூ..சுவைப்பா சுவை






உங்கள் பிள்ளை பால் குடிக்க மறுக்கிறதா? கவலைப்படாதீர்கள். அதற்கு இன்சுவையுள்ள ஊட்டமிக்க கஸ்டர்டு தாருங்கள். அது மகிழ்வுடன் சாப்பிடும். அதைத் தயாரிக்கும் முறை மிகவும் எளிது. 4 தேக்கரண்டியளவு பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுதுபோல ஆக்குங்கள். பிறகு ஒரு கோப்பை பாலை சூடாக்கி, அதில் இந்த விழுதைக் கரையுங்கள். கொதிக்கும் வரை கிளறுங்கள். பின்னர் நெய்தடவிய தட்டில் ஊற்றுங்கள். அது குளிர்ந்து படியட்டும். நாள்தோறும் உங்கள் பிள்ளைக்குப் பால் கொடுக்கும் சுவையான வழி இது!



பழ சாலடைக் கிண்ணத்தில் எடுத்து, கஸ்டர்டால் அலங்கரியுங்கள். இப்போது கேக்கின் மீது கஸ்டர்டு தடவி, சுவையைக் கூட்டுங்கள். ஜெல்லியின் மீது கஸ்டர்டு தடவிப் பாருங்கள். எல்லாம் சுவைமயம்! இத்தகைய கஸ்டர்டு தயாரிக்க, 1½ தேக்கரண்டி பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுது போல் ஆக்குங்கள். ஒரு கோப்பை பாலை சூடாக்குங்கள். அதில் கஸ்டர்டு பவுடர் விழுதைக் கரைத்து, கொதிக்கும் வரை கிளறுங்கள். அதை சூடாகவோ, குளிர்ந்ததாகவோ உங்கள் பிள்ளைக்குத் தாருங்கள். சுவையோ சுவை!



ஒரு விசேஷ முறை: நீங்கள் வீட்டிலேயே ஐஸ்க்ரீம், ஃபலூதா, பாயசம், ரபடி தயாரித்தால், பாலைக் கெட்டியாக்க பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரையும் சேர்க்கவும். ஒவ்வொரு தித்திப்பும் இரட்டிப்பு சுவை தரும்! இதற்கு வெரய்டி கஸ்டர்டு பவுடரை உபயோகியுங்கள். வனில்லா, ஆரஞ்சு, பனானா, ஸ்ட்ராபெர்ரி, லெமன், ராஸ்ப்பெர்ரி, ஆகிய 6 கனிச்சுவையுள்ள கஸ்டர்டு பவுடர்கள் உள்ளன.



அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப் படுத்தப்பட்டதால், கஸ்டர்டு பவுடர்களிலேயே மிகச் சிறந்தது பிரவுன் & போல்ஸன். ஒரு டின் கைவசம் இருக்கட்டும்... எப்போதுமே!

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரை. லிட்.
பம்பாய்-400 001.


பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர்

அறுவைச் சிகிச்சையும் அக்குப் பங்க்சரும்

" நாராயண் "

உங்கள் வீட்டில் யாருக்காவது அறுவைச் சிகித்சை நடந்திருந்தால் அவர்களிடம் சென்று கேளுங்கள், 'அனஸ்தடிக் ஏஜெண்ட் (*Anaesthetic agents*) என்றால் என்ன?'' என்று. அவர்கள் படித்தவர்களாயிருந்தால் உடனே சொல்வார், ''அறுவைச் சிகித்சைக்கு முன் போடப்படும் மருந்து. இது உணர்வுகளை மரத்துப் போகச் செய்யும்'' என்று.

''நீங்கள் நிறைய மிட்டாயும் ஐஸ் கிரீமும் சாப்பிடுபவராயிருந்தால் பல் டாக்டரிடம் சென்று பல் எடுக்கும் போதும் இது தெரியும். அவர்கள் பல் எடுக்கு முன்பு அரை மணி நேரம் முன்னால் ஓர் ஊசியை நீங்கள் அலற அலற உங்கள் எகிறில் போடுவார்கள். இது கொக்கெயின் (*Coccaine*) என்னும் லோக்கல் அனஸ்தடிக் ஆகும். பெரிய அறுவைச் சிகிச்சைக்கு முன் கொடுக்கும் க்ளோரோஃபார்ம் ஒரு ஜெனரல் அனஸ்தடிக்காகும். (*Local anaesthetic and General anaesthetic*) இது நம்மை மயங்க வைக்கும். இவற்றையெல்லாம் நடைமுறையிலிருந்து விலக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. மேலும் அறுவைச் சிகித்சை, இவற்றை உபயோகப்





படுத்தும்போது கடினமாகஇருக்கின்றது. இப்போது அக்குப் பங்க்சர் என்ற புதிய முறை (*Acupuncture*) வந்துள்ளது.

அக்குஸ் என்றால் இலத்தீனில் ஊசி என்று பொருள். பங்க்சர் (*Pungere-Latin*) என்றால் அம்மொழியில் துளைத்தல் என்று பொருள். ஆனால் இவ்வார்த்தையைப் பச்சை குத்துவதென்னும் பொருளில் உபயோகிப்பர். உண்மையில் மருத்துவத் துறையில் அக்குப் பங்க்சர் முறை ஏறத் தாழப் பச்சை குத்துவதை ஒத்திருக்கிறது. இம்முறை முதலில் தோன்றிய இடம் சீனாவாகும். சுமார் 2000 முதல் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே இம்முறை அவர்களுக்குத் தெரியும்.

பண்டைச் சீன மருத்துவர்கள் நமது உடலில் பன்னிரண்டு சாதாரணமாயும் எட்டு அசாதாரணமாயும் உள்ள தொடர்ச்சியுள்ள கோடுகளைப் (*Channels*) பற்றி அறிந்துள்ளனர். இவற்றை அவர்கள் மெரிடியன் (*Meridian*) என்பர். ஒவ்வொரு மெரிடியனுக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட பெயர் உண்டு.

உதாரணமாக, கல்லீரல் தொடர்புடையதற்கு ''கல்லீரல் மெரிடியன்'' என்று பெயர். இம்மெரிடியன்கள் திசுக்களையும் (*Tissue*) முக்கிய உறுப்புக்களையும் சேர்க்கும்'' உயிருள்ள தொடர்புகள்'' (*Functional Connections*) எனப்படும் ஒவ்வொரு உறுப்புக்கும் (*Organ*) ஒரு சில மெரிடியன் புள்ளிகள் (*Peep-holes*) உண்டு. உதாரணமாகச் சிறு

21-ம் பக்கத்தில் இலைகளிடையே மறைந்திருக்கும் மிருகங்கள் இவைதான்.

நீரகத்துக்கு 29 மெரிடியன் புள்ளிகள் உள்ளன. மொத்தம் நமது உடலில் 365 புள்ளிகள் உண்டு.

இப்புள்ளிகளை எவ்வாறு அறிவது? அதைக் கண்டு பிடிக்க 'ஸ்கின் ரெஸிஸ்டன்ஸ் எலெக்ட்ரோ மீட்டர்' என்ற உபகரணம் உண்டு. இதன் உதவியால் தேர்ந்த மருத்துவர்கள் இப்புள்ளிகளை நோயாளிகளின் உடலில் கண்டுபிடித்து அங்கு அக்குப் பங்க்சர் முறையைக் கையாளுகின்றனர்.

இம்முறையில் பயன்படுத்தப்படும் ஊசிகள் மிகவும் மெல்லியவை. தங்கத்தாலும் வெள்ளியாலும், வார்ப்பிரும்பாலும் (*Steel*) செய்யப்பட்ட ஊசியைப் பயன்படுத்துகின்றனர். இவை 2.20 சென்டிமீட்டர் நீளமுள்ளவை. இவற்றை மெரிடியன் புள்ளிகளில் சில மில்லிமீட்டர் ஆழம் குத்தி ஆட்டுகின்றனர். சிறிது நேரத்தில் அம் மெரிடியனுக்குள்ள பகுதியில் என்ன செய்தாலும் வலி தெரியாது. சிகிச்சைக்கு 20 முதல் 30 நிமிடம் முன்னாலேயே இவ்வூசிகளைக் குத்தி விடுவர். ஊசிகளை ஆட்டுவதற்குப் பதிலாகக் குறைந்த சக்தியுடைய நேர் மின்சாரத்தைப் பாய்ச்சுவர். (டி.சி. 12 வோல்ட், 290-மைக்ரோ ஆம்பியர்)

1972ம் ஆண்டில் டாக்டர் டேவிட் சால்டோர் தலைமையில் ஒரு மருத்துவக் குழு ருஷ்யாவிலிருந்து சீனா சென்று, அங்கு இவ்விதம் நடக்கும் அறுவைச் சிகித்சை முறையைக் கண்டறிந்தனர். நமது இந்தியாவில் இம்முறையைப் பின்பற்றி முதல் அறுவைச் சிகித்சைசெய்த பெருமை ஒரு பெண்மணியைச் சாரும். அவர்தான் ஜே. ஜே. மருத்துவ மனையில் பணியாற்றும் டாக்டர் (திருமதி) டாலி குர்பாக்ஸனி. இவரும் இவரது கணவரும் சேர்ந்து முதன்முதலில் ஒரு பிரசவ சிகிச்சையை இம்முறையில் நடத்தி வெற்றி கண்டனர். இம்முறையை இவர்கள் ஒசாகா மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றில் வேலை பார்க்கும் பேராசிரியர் ஹயோடோ (*Prof.Hyodo*) என்பவரிடம் கற்றனராம். ஏன், நமது தமிழ் நாட்டிலேயே, சமீபத்தில் சென்னையில் மூளை அறுவைச் சிகிச்சைக்கு இம்முறையைக் கையாண்டு வெற்றி கண்டுள்ளனர்.

அக்குப் பங்க்சர் முறையைப் பற்றி மேலும் பலப் பல உண்மைகளைக் கண்டறிய மருத்துவர்கள் முயல்கின்றனர். அவர்களது முயற்சி கைகூடினால், உடலுக்கு ஊறு விளைவிக்கும் பலவகைப்பட்ட மயக்க மருந்துகளை உபயோகிக்கும் முறை மறைந்து விடும்.



மந்திரக் கம்பளம் 10


வாண்டுமாமா

அக்கினி அரக்கனிடம் தானே பனி அரக்கனின் சார்பாகச் சவால் விட்ட கீர்த்தி; பனி அரக்கனைச் சந்தித்துச் செய்தியைக் கூறக் கிளம்பினான். அதை உசுப்பி விட்டுக் கோபமடையச் செய்தாக வேண்டும். பிறகு அக்கினியும் பனியும் மோதுவதை எட்ட இருந்து கண்டு ரசிக்க வேண்டும். இதை நினைத்த போது கீர்த்திக்குச் சிரிப்பு வந்தது. காரணம், தான் படித்த ஒரு கதையுடன் தன் நிலையை ஒப்பிட்டுக் கொண்டதனால்தான். இரண்டு முரட்டுச் செம்மறியாடுகள் மடார் மடார் என்று தலையோடுதலை மோதிச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனவாம். அதை ஒரு நரி நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டபடி பார்த்துக் கொண்டிருந்ததாம். அந்த இரு ஆடுகளுக்கும் சண்டை மூட்டிவிட்டதே இந்த நரிதான். அவை இரண்டும் முட்டி மோதி மண்டை பிளந்து மடியும்போது அவைகளின் ரத்தத்தை ருசித்து மகிழ நரி காத்திருந்தது.

''நரியின் நிலையில் நான் இருக்கிறேன் இப்போது...!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் கீர்த்தி. ''ஆனால் நரியைப் போல என் செயல் இழிவானதல்ல. எதிரியை வெற்றி கொள்ள நால்வகை உபாயங்களைக் கையாளலாம் என்று மநு தர்மமே சொல்கிறது. ஆகவே, இந்தக் கொடிய மிருகங்களைக் கொல்ல அந்த உபாயங்களில் ஒன்றை நான் கையாளுவதில் தவறில்லை'' என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்ட கீர்த்தி, பனி அரக்கனின் இருப்பிடத்துக்குப் போக மந்திரக் கம்பளத்தின் மீது அமர்ந்து கொண்டான். தன்னை அதனிடம் கொண்டு சேர்க்குமாறு ஆணையிட்டான். கம்பளம் ககன மார்க்கத்திலே அநாயாசமாக மிதந்து சென்றது.

சிறிது நேரத்துக்கெல்லாம் கம்பளத்தில் அமர்ந்திருந்த கீர்த்திக்கு வெட வெடவென்று உடல் நடுக்கம் கண்டது. 'சரி, பனி அரக்கனின் இருப்பிடத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்! அதனால்தான் இவ்வளவு குளிர்' என்று நினைத்தது அவன் உள்ளம். மந்திரக் கண்ணாடிக் கோளத்தில் கண்ட காட்சிகள் தூரத்தில் தெரியலாயின. எங்கும் ஒரே வெண்மை. எங்கு திரும்பினாலும் பனிமலைகள். ஓர் இடத்திலிருந்து வெண் புகையாக வெளி வந்து கொண்டிருந்தது. ஆனால் அந்தப் புகை சற்றைக்கெல்லாம் பனித்தூள்களாக உதிர்ந்தது. பனி அரக்கனின் மூச்சுக் காற்றுத்தான் அந்த வெண் புகை. அதன் மூச்சுக் காற்று வெளி வந்ததும் சூழ்நிலையின் குளிர்ச்சியினால் பனித் துகள்களாகி உதிர்ந்தன. பனியோடு பனியாக அந்தக் கொடிய மிருகம் இருக்குமிடமே தெரியவில்லை. அந்தப் புகை வருவதிலிருந்து தான் அது அங்கு இருக்க வேண்டுமென்று புலனாயிற்று.

இன்னும் சற்று அருகே சென்றபோது கீர்த்தி அதிசயமான காட்சிகளைக் கண்டான். சலவைக் கல் சிலைகளாக வீரர்கள் பலவிதமான கோணங்களில் ஆயுதங்களை ஏந்திய நிலையில் ஆங்



காங்கே காட்சியளித்தார்கள். குதிரைகளின் மீதமர்ந்தபடியும் கீழே நின்று வேல் வீசும் நிலையிலும் வாளைச் சுழற்றும் பாவனையிலும் பலப்பல சலவைக்கல் சிலைகள்.

''இந்தச் சிலைகளெல்லாம் இங்கு எப்படி எதற்காக வந்தன? ஒரு காலத்தில் இங்கு ஏதாவது பெரிய சாம்ராஜ்யம், அரண்மனை இருந்திருக்குமா? பனி அரக்கனின் ஆக்கிரமிப்பினால் இந்த இடம் இப்படிப் பனி மூடி...''

இதற்குள் கம்பளம் அந்தச் சிலைகளுக்கு மிகமிக அருகே பறந்து சென்றது. கீர்த்தி சலவைக் கல் சிலைகளை உற்றுப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவைகளெல்லாம் சிலைகளல்ல. நிஜமான மனிதர்கள். ஒரு காலத்தில் உயிரோடிருந்த வீரர்கள், குதிரைகள். பனி அரக்கனைக் கொல்லுவதற்காக வந்து இப்படிப் பனிக்கட்டியாக உறைந்து, போய் நிற்கிறார்கள். இந்த உண்மை தெரிந்த போது கீர்த்தியின் ரத்தமும் உறைவது போலிருந்தது. அத்தனை குளிரிலும் அவன் அகன்ற நெற்றியில் வியர்வை முத்துக்கள் பூத்தன. எத்தனையோ உறுதியாகப் பற்களைக் கடித்துக் கொண்டும் அவை தடதடவென்று தாளம் போட்டன. ஆனாலும் தைரியத்தைத் திரட்டிக் கொண்டான். பனி அரக்கன் இருக்கும் பக்கம் பார்த்து 'ஹேய்' என்றழைத்தான்.

''ஹேய்...ஹேய்...ஹேய்...'' என்று நாலா பக்கமிருந்தும் பல குரல்கள் எதிரொலியாகக் கிளம்பி அதிர்ந்து அடங்கின. திடீரென்று ஒரு பனி மலை புரண்டது. பனிக் கட்டிகள் சரிந்தன. கர்ண கடூரமான ஒரு கர்ஜனையை அடுத்து ஒரு நீண்ட வால் வானிலே சுழன்று சொடுக்கியது பமீர் என்று. அங்கே அந்த வெண்பனிப் பரப்பிலே சரேல் என்ற ஒரு ஜந்து தனது செக்கச் சிவந்த அகன்ற வாயைத் திறந்து திறந்து மூடியபடி எழுந்து நின்றது. அப்படி நின்ற அதிர்விலே அதன் உடலை மூடியிருந்த பனிப் பாளங்கள் பலத்த ஒலியுடன் கீழே விழுந்தன. பனிப் பாறைகள் உடைந்தால் சிதறுமே அப்படிப் பனித் துகள்கள் எங்கும் பறந்தன.

நீலமான கண்கள். அதைக் கண்டாலே மரணத்தின் நினைவு வந்தது. அதன் உடலெல்லாம் எஃகுத் தகடுகளை அடுக்கியது போலச் செதில்கள். சூறாவளிக் காற்றும் புயல் காற்றும் வீசும் போது, 'ஊ, ஊ' என்று ஒலி ஏற்படுமே அப்படி ஓர் ஒலி அது மூச்சு விடும்போது உண்டாயிற்று. அக்கினி அரக்கனைப் போல இதுவும் பேசிற்று.

''யார் நீ, எங்கிருக்கிறாய்? என்னை 'ஏய்' என்றழைக்கும் வல்லமை பெற்றவனை இன்றுதான் காண்கிறேன். கோழையைப் போல ஒளிந்து கொண்டிருப்பானேன்? என் முன்னால் வா என்றது. ஊழிக் காற்றின் ஓலத்தைப் போல அதன் குரல் ஊங்காரமிட்டது.

அருகிலிருந்த ஒரு மலையின் உச்சியில் நின்று கொண்டிருந்த கீர்த்தி தன் உருவை மறைக்கும் மந்திரக் குல்லாயைக் கழற்றினான். ''இதோ இருக்கிறேன், பார்'' என்றான்.

தனது பயங்கரமான தலையைத் திருப்பிக் கீர்த்தியைப் பார்த்த அந்த மிருகம் அவனை நோக்கி நகர்ந்தது. பாம்பு ஊர்வதைப் போல் பனிப் படலத்திலே வளைந்து வளைந்து ஊர்ந்து வந்த அது மலை மீதும் ஏறலாயிற்று. அப்போதுதான் கீர்த்தி அதற்குக் கால்கள் என்று ஏதுமில்லாததைக் கண்டான். வழுவழுப்பான அந்த மலையில் தன் மூச்சுக் காற்றினால் உண்டாக்கிய பனிப் படலத்தைப் பற்றிக் கொண்டு பாம்பைப் போல வளைந்து வளைந்து மலை மீது ஏறி அவனை நெருங்கிக் கொண்டிருந்தது. அதன் தலை மட்டும் நிமிர்ந்து கீர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தது. கீர்த்தி கைகளைத் தேய்த்துச் சூடாக்கிக் கொண்டான். அந்த மிருகம் நெருங்கி வர வர அவன் உடல் உணர்விழந்து மரத்துப் போய்க் கொண்டிருந்தது. கைகால்கள் கெட்டியாகி அசைக்க முடியாதபடியாயின. 'இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருந்தால் நானும் இங்குள்ள சிலைகளைப் போலப் பனிக்கட்டிப் பாறையாகி மலையுச்சியிலிருந்து உருண்டு விழ வேண்டியதுதான். இந்தப் பனி அரக்கனிடமிருந்து எட்டப் போய் நின்று கொண்டால்தான் உயிர் பிழைக்கலாம்' என்ற முடிவுக்கு வந்த கீர்த்தி சட்டென்று தன் மந்திரப் பாதுகைகள் அணிந்த பாதத்தைத் 'தட் தட்' என்று மூன்று முறை தட்டினான். அடுத்த விநாடி அந்த மலை முகட்டிலிருந்து வெகு தூரத்திலிருந்த இன்னொரு மலை உச்சிக்கு அந்தப் பாதுகை அவனைப் பாதுகாப்புடன் கொண்டு சேர்த்தது.

''அப்பாடா! பிழைத்தேன்!'' என்று விரைத்துப் போயிருந்த விரல்களை நீவி விட்டுக் கொண்டு பல தடவை மடக்கி மூடிக் கை விரல்களில் ரத்த ஓட்டத்தை உண்டாக்கி உணர்ச்சி பெறச் செய்தான். அதே போலத் தாளமிடும் பற்களைக் கட்டுப்படுத்தி நாக்குப் புரள்வதற்கு ஏற்பக் கொஞ்சம் உடலில் சூடு உண்டாக்கிக் கொண்ட பிறகு மறுபடியும் 'ஹேய்!' என்று குரல் கொடுத்தான்.

''இங்கிருந்தவன் அதற்குள் அங்கு எப்படிப் போனாய்? ம்...ஆண் மகனானால் நான் அங்கு வரும்வரை அப்படியே அங்கேயே இரு'' என்றது பனி அரக்கனாகிய மிருகம்.

இரும்பு போன்ற கருத்த மலைமீது அது ஏறியதனால், அதன் சீதளத்தினால் பனி மூடி வெண்மையாகிப் போயிருந்த அதிலிருந்து வழுக்கிச் சறுக்கியபடி வெகு வேகமாகக் கீழே இறங்கலாயிற்று. அதே சமயம்...


கீர்த்தி திடீரென்று தன் முதுகுப் பக்கத்திலே சுரீர் என்று சூடு உறைப்பதை உணர்ந்தான். முன்னால் ஜிலீர், பின்னாலோ திகு திகு காந்தல்? ஏன் இப்படி? கீர்த்தி திரும்பிப் பார்த்தான். 'புதன் (மெர்க்குரி) கிரகத்துக்கு வந்து விட்டோமோ? அங்குதான் முன் பக்கம் தாங்க முடியாத தகிக்கும்



வெப்பமாகவும் பின் பக்கம் சகிக்கக் கூடாத குளுமையாகவும் இருக்குமென்று வான சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது' இப்படி எண்ணமிட்டபடியே வெகு தூரத்துக்குப் பார்வையை ஓடவிட்ட கீர்த்தி தொலை தூரத்துக்கப்பால் பச்சை மரங்களெல்லாம் கருகிக் கொண்டு வருவதைக் கண்டு திடுக்கிட்டான். பசும் புல் வெளி தகதகவென்று கொழுந்து விட்டு எரியும் அக்கினித் தடாகமாகக் காட்சியளித்தது. அதற்கும் அப்பால்... அதோ அதென்ன? கொள்ளி வாய்ப் பிசாசா? குப் குப்பென்று தீப்பந்தத்தில் குங்கிலியத்தை வீசினாற்போல் குபீர் குபீர் என்று ஜ்வாலை நெளிந்து ஓடுகிறதே! அக்கினி அரக்கனின் மூக்கிலிருந்தல்லவா இப்படி ஜ்வாலை வரும்?... 'ஆமாம்! அதோ அக்கினி அரக்கனே வந்து கொண்டிருக்கிறது. காத தூரத்துக்கு அப்பால் வரும் போதே இங்கு இப்படிக் காந்துகிறதே. அதே சமயம் தன் முன்னால் தன்னை நோக்கி முன்னேறிக் கொண்டு வரும் பனி அரக்கனைக் கண்டான். அதென்னது? அது வெகு வேகமாகத் தன்னுடைய வாழ்விடமான சீதளக் குழியை நோக்கித் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறதே? அக்கினி அரக்கனின் வெப்பத்தினால் பனி அரக்கனின் பனி மூச்சினால் மூடியிருந்த உறை பனி அடுக்குகளெல்லாம் மளமளவென்று உருகிச் சரியலாயின.

தனது' குல வைரியான பனி அரக்கன் வரும்வரை காத்திருக்க முடியவில்லை, அக்கினி அரக்கனால். விரோதியைத் தேடித் தானே வந்து விட்டது. இதோ அக்கினியும் உறை பனியும் சந்தித்துக் கொள்ளப் போகின்றன. முட்டி மோதிக் கொண்டு போரிடப்


சிரிக்கச் சிரிக்க..!





போகின்றன. தான் எண்ணியது கை கூடப் போகிறது என்று மகிழ்ந்த கீர்த்தி, ''பனி அரக்கனே! உன்னைச் சந்திக்க அதோ உன் ஜன்ம விரோதி அக்கினி அரக்கன் வந்து கொண்டிருக்கிருன். வரவேற்கத் தயாராக இரு'' என்று உரக்கக் கூவியபடி நெடுந்தூரத்திலிருந்த வேறு ஒரு மலை உச்சிக்குத் தன்னுடைய இருப்பிடத்தை மாற்றிக் கொண்டான் கீர்த்தி.

இரண்டு மிருகங்களும் கோபமும் கொதிப்பும் குரோதமும் கொண்டு கர்ஜித்தன. சுற்று வட்டாரத்து மலைகளெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கின. கீர்த்தி தன் இரு காதுகளையும் இறுக்கிப் பொத்திக் கொண்டான். அக்கினியும் பனியும் மாறி மாறி உறுமித் தங்களது பலத்தையும் கோபத்தையும் காண்பித்துக் கொண்டிருந்தன. ஆனால் ஒவ்வொன்றும் வெகு வெகு தூரத் துக்கப்பால் விலகித் தானிருந்தன. பனி அரக்கன் தன்னுடைய குளிர்க் குகைக்குள் போய் முடங்கிக் கொண்டதானது. குறிப்பிட்ட எல்லைக்குள் அக்கினி அரக்கன் வரட்டும் என்று காத்திருந்தது போலிருந்தது; எந்த விநாடியும் தனது விரோதியின் பயங்கரமான தாக்குதலை நாலா திசைகளிலிருந்தும் எதிர்பார்த்தபடி அக்கினி அரக்கன் வாயைத் திறந்து திறந்து தீ ஜ்வாலைகளை உமிழ்ந்தபடி வழியெல்லாம் சாம்பலாக்கிக் கொண்டு மெள்ள மெள்ள முன்னேறிக் கொண்டிருந்தது. இவ்விரு பயங்கரங்களும் மோதிக் கொள்ளுவதைக் காணத் துடிப்போடு காத்துக் கொண்டிருந்தான் கீர்த்தி. இரண்டு கோர மிருகங்களும் கோபமாகக் குமுறும் கூச்சலால் அந்தப் பிராந்தியமே பீதி கொண்டு நடுங்கிக் கொண்டிருந்தது. (தொடரும்)





தெரியுமா ?

1303. இந்தியாவின் மிக நீளமான சாலை எத்தனை மைல்கள் நீளம்?

1304. இந்திய மாகாணங்களிலேயே ஜனத் தொகை அதிகமான ராஜ்யம் எது தெரியுமா?

1305. பாரதத்தின் மிக உயர்ந்த கோபுரம் எது?

1306. இந்தியாவில் உள்ள மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?

1307. மிகப் பெரிய நுழை வாயில் நம் நாட்டில் எங்குள்ளது?

1308. மிக உயரமான கற் சிலை இந்தியாவில் எங்குள்ளது?

1309. இந்திய மாகாணங்களிலேயே மிகப் பெரிய மாகாணம் எது?

1310. பாரதத்தின் மிகப் பெரிய வாசக சாலை (லைப்ரரி) எங்குள்ளது?

1311. சக்கரவர்த்தி என்பதற்கு ஜெர்மானிய மொழியில் கூறப்படும் வார்த்தை என்ன?

1312. பத்தொன்பது வயதில் ஒரு பெண் தன் கண் பார்வையை இழந்தாள். காது கேட்பதும் வாசனை உணர்வும் கூடப் போய்விட்டன. இவளுடைய ஆசிரியையின் கருணையினால் இப்பெண் படித்து மிக உயர்ந்த பட்டங்களைப் பெற்றாள். இவரது பெயர் என்ன?

1313. மனிதனின் தீவு - *Isle of man* என்ற இடத்திலுள்ள நாடாளுமன்றக் கீழ்ச் சபையின் (*Lower House*) பெயர் என்ன?

1314. ஜமைக்காவின் தலைநகர் எது?

1315. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கதாசிரியர் ஒருவர், சமூக சீர்திருத்தவாதியும்கூட அவர்—வாட்டர் பேபீஸ் — நீர்க் குழந்தைகள் என்ற ஒரு நவீனத்தை எழுதினார். அவர் பெயர் என்ன?

1316. ஒரு கடல் அதன் பரப்பளவு 28,000,000 சதுர மைல்களுக்குமேலே. மேற்குத் திசையில் ஆப்பிரிக்காவைக் கிழக்குத் தீவுக் கூட்டங்களிலிருந்தும், கிழக்குத் திசையில் ஆஸ்திரேலியாவையும் பிரிக்கிறது. இதன் வடக்கு எல்லையில் ஆசியா உள்ளது. இது எந்தக் கடல்?

1317. குழந்தைகளுக்கு விளையாட வாங்கித் தரப்படும் துணியில் தயாரிக்கப்படும் 'டெடிபேர்' எனப்படும் கரடிப் பொம்மையின் வயது என்ன தெரியுமா?



1318. இந்தப் பெண் ஆடும் இந்த விளையாட்டு பூர்விக அமெரிக்க இந்தியர்கள் (செவ்விந்தியர்) விளையாடியது. இதன் பெயர் தெரியுமா?

1319. பிரான்ஸ் தேசத்தின் மிக நீளமான நதி எது?

1320. பெரு நாட்டின் தலைநகரம்?

1321. எரிமலையிலிருந்து பொங்கி வழியும் குழம்புக்கு ஆங்கிலத்தில்என்ன பெயர்?

1322. ரஷ்யாவின் கடைசி (ஸார்) அரசர் யார்?


1323. கென்யாவின் தலைநகர் எது?

1324. இயேசு பிரான் தமது இளமை நாட்களை எங்கு கழித்தார்?

1325. மின் காந்த சக்தியைக்கண்டு பிடித்தது யார்?

1326. புராதன எகிப்தியர்கள் எழுதுவதற்குப் பயன்படுத்திய பொருளின் பெயர் என்ன?

தெரியுமே !



1303. கிராண்ட் டிரங்க் ரோடு 1500 மைல்கள் நீளம். 1304. உத்தரப் பிரதேசம். 1305. குதுப்மினார். 1306. மைசூரிலுள்ள கிரஸப்பா நீர்வீழ்ச்சி 900 அடிகள் உயரம். 1307. ஃபதேபூர் சிக்ரியிலுள்ள புலந் தர்வாஸா. 1308. மைசூரிலுள்ள கோமடேசுவரர் சிலை. 56 அடி உயரம். 1309. மத்தியப் பிரதேசம். 1310. தேசிய வாசகசாலை, கல்கத்தா. 1311. கெய்ஸர். 1312. ஹெலன் கெல்லர். 1313. தி கீஸ். (Ihe Keys) 1314. கிங்ஸ்டன். 1315. சார்லஸ் கிங்ஸ்லே. 1316- இந்துமாக் கடல். 1317. எழுபது வயது. மேற்கு ஜெர்மனியிலுள்ள இன்றைய உர்டெம்பர்க் எனப்படும் கியென்ஜென் கிராமத்தில்தான் இது 1904ல் மார்கரெட் ஸ்டீஃப் என்பவரால் முதன்முதல் தயாரிக்கப் பட்டது. 1318. லாக்ராஸ் (Lacrosse) 1319. (Loire) லாய்ர்நதி. 1320. லிமா (Lima) 1321. லாவா (Lava) 1322. இரண்டாம் நிகோலஸ். 1323. நைரோபி. 1324. நாசரேத் என்னுமிடத்தில். 1325. ஹான்ஸ் கிறிஸ்தியன் ஊர்ஸ்டட். 1326. பாபிரஸ்.



எனக்கு இன்னுமொரு பாரி மிட்டாய் தா!

Parry's

குழந்தைகள் எப்போதும் விரும்புவது பாரி மிட்டாய்கள். அவர்கள் இழக்கும் சக்தியை திரும்பவும் உடனுக்குடனே வழங்குபவை பாரி மிட்டாய்கள். அவை புத்தம் புதியவை. சத்துள்ளவை. ருசிமிக்கவை.

PRS-6396


தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை-1

பிலிப்ஸ் ஃப்ளூரோஸெண்ட் லாம்புகளில் ஓரங்கள் கறுப்பதைத் தடுப்பது எது?

ஃப்ளூரோஸெண்ட் லாம்புகளில் ஓரங்கள் கறுத்துவிட்டால் ஒளித்திறன் குறைந்து பார்ப்பதற்குக் கவர்ச்சி யற்றதாகத் தோற்ற மளிக்கும். காரணம்? எமிட்டர் பேஸ்ட் கணங்கள். இவை லாம்ப் பொருத்திய வுடன் தெறித்துக் குழலின் மேற் புறத்தில் படிந்து விடுகின்றன. ஆனால் பிலிப்ஸ் லாம்புகளில் இது ஏற்படுவதில்லை. அதுவே தெறிக்கும் எமிட்டர் கணங்களைப் பிடிக்கும் சாதனம் இருப்பதின் விசேடம். இது எலெக்ட்ரோடு களைச் சுற்றியுள்ள ஒரு வளையமாகும். எமிட்டர் பேஸ்ட் கணங்கள் தெறிக்கும் போது அவை லாம்பின் மீது படி வதைத் தடுத்து விடுகிறது. அதனால் ஓரங்கள் கறுப்பது தடுக்கப்பட்டு ஒளிக் கதிர்களின் திறன் மிகச்சீரான நிலையில் இருக்கின்றன. இது தான் மற்ற எந்த ஃப்ளூரோஸெண்ட் லாம்பிலும் இல்லாத ஒரு விசேட அமைப்பு.

எலெக்ட்ரோடுகளைச் சுற்றியுள்ள ஆனோட்ரிங்.






பிலிப்ஸ் ஃப்ளூரோஸெண்ட் லாம்புகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வது லாபமளிக்கிறது.

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

பிலிப்ஸ்

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM



